பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 08 புதன்கிழமை (21.05.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 176

## விடுதலைப் புலிகளின் மூத்த தளபதியான பிரிகேடியர் பால்ராஜ் மாரடைப்பால் மரணம்!



கிளிநொச்சி, மே21

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு கள முனைகளில் களமாடி வரலாறு படைத்த மூத்த தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜ் (வயது 50) திடீர் மாரடைப்பால் நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் காலமானார்.

விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் இந்த அறிவிப்பை நேற்றிரவு விடுத்தது.

இதுதொடர்பாக விடுதலைப்புலிகளின் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில், நேற்று-செவ்வாய்க்கிழமை (20.05.2008) இரண்டு மணியளவில் பிரிகேடியர் பால்ராஜ் மாரடைப்பால் மரணமாகியுள்ளார் என்பதை தமிழ் மக்கள் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 21, 22, 23 ஆம் திகதிய 3 நாள்களும் தேசிய துக்க நாள்களாகக் கடைப்பிடிக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு களமுனைகளில் பங்களித்து வந்த பால்ராஜ் 2000ஆம் ஆண்டில் ஆனையிறவு மீட்புப் போரில் முக்கிய பங்கு வகித்தார். 'ஜெயசிக்குறு' இராணுவ நடவடிக்கையிலும் முக்கிய பங்கு வகித்த தளபதியாக விளங்கினார்.

1991ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட முதலாவது மரபுவழிப் படையணியான சான்ஸ் அன்ரனி படைப்பிரிவின் (12ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைக் கவுன்ஸில் தேர்தல் இன்று; எதிர்ப்புக்கு மத்தியிலும் களத்தில் இலங்கை!

## தோரிவில் வீழ்த்த பொது அமைப்புகள் மும்முரம்!!

ஜெனிவா, மே 21

**சர்வதேச ரீதியில் தனக்கு எதிராகக் கிளர்ந்துள்ள கடும் எதிர்ப்பு அலைகளுக்கு மத்தியிலும் இலங்கை இன்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்ஸிலில் மீண்டும் உறுப்புரிமை பெறுவதற்கான தேர்தலில் போட்டியிடுகின்றது.**

**நியூயோர்க்கில் நடைபெறும் இத்தெரிவில் வெற்றி கிட்டும் என்ற முழு நம்பிக்கை இருப்பதாக இலங்கை அரசுப் பிரதிநிதிகள் உறுதி வெளியிட்டுள்ள போதிலும், இலங்கையை எப்படியும் தோற்கடிக்கச் செய்ய வேண்டும் என்பதில் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச அமைப்புகளும் சர்வதேசப் பிரமுகர்களைக் கொண்ட தரப்புகளும் மிகத் தீவிரமாக உள்ளன என்று கூறப்படுகின்றது.**

47 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட இக்கவுன்ஸிலுக்கு ஆசியப் பிராந்தியத்தில் இருந்து நான்கு நாடுகள் அடுத்த இரண்டு ஆண்டுகால உறுப்புரிமைக்குத் தெரிவு செய்யப்படவேண்டும்.

அந்த நான்கு இடங்களுக்கான போட்டியில் பஹ்ரைன், ஜப்பான், பாகிஸ்தான், தென்கொரியா, கிழக்குத் திமோர் ஆகியவற்றுடன் இலங்கையும் உள்ளது.

இந்த ஆறு நாடுகளில் ஏதேனும் இரண்டு நாடு தேர்தலில் தோல்வியுறுவது தவிர்க்க முடியாததாகும்.

மோசமான மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச ரீதியில் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருக்கும் இலங்கை இக்காரணத்தினால் இத்தேர்தலின்போது ஏனைய நாடுகளினால் தோற்கடிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது. இலங்கையில் மனித உரிமைகள் மிக மோசமாக இடம்பெற்று வருகையில், கவுன்ஸிலில் மீண்டும் இலங்கைக்கு இடமளிப்பது கவுன்ஸிலின் தராதரத்தைக் கொச்சைப் படுத்திப் பலவீனப்படுத்துவதாக அமைந்துவிடும் என்ற பொதுவான கருத்து அரச சார்பற்ற அமைப்புகள் மத்தியிலும் மனித உரிமை ஆர்வலர்களிடமும் உருவாகியுள்ளமை இலங்கைக்குப் பாதகமான விடயமாக அமைந்துள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் பொதுமகன் சுட்டுக்கொலை

கொழும்பு, மே 21

மட்டக்களப்பு, பதுளைச் சந்தியில் நேற்றுமுன்தினம் இரவு 11.55 மணியளவில் சிவிலியன் ஒருவர் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## அதாவுல்லாவுக்கு எதிராக அம்பாறையில் சுவரொட்டி

கிழக்கு மாகாண முதலமைச்சர் விவகாரத்தில் அமைச்சர் அதாவுல்லா முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்துவிட்டார் எனத் தெரிவித்து - அவரை முஸ்லிம்களின் துரோகியாக வர்ணித்து - அம்பாறையில் உள்ள முஸ்லிம் ஊர்கள் பலவற்றிலும் அவருக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தலவில் மீண்டும் தாக்குதல்; இம்முறை ஊர்காவலர் பலி!

கொழும்பு, மே 21

தென்மாகாணத்தில் அவ்வப்போது இனந்தெரியாதோரின் திடீர்த் தாக்குதல்கள் இடம்பெற்று வரும் புத்தல பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு திரும்பவும் ஒரு திடீர்த் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது.

புத்தல - கதிர்காமம் வீதிக்கு இடைப்பட்ட 38 ஆம் கட்டையில் காவலில் ஈடுபட்டிருந்த ஊர்காவலர் மீதே இனந்தெரியாத நபர்கள் நேற்றுமுன்தினம் இரவு 10.45 மணியளவில் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்கின்றனர். இத்தாக்குதலில் காவலரண் ஒன்றில் இருந்த ஊர்காவலர் ஒருவர் பலியானார்.

புத்தல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சுமித் சஞ்சீவ (வயது - 26) என்ற ஊர்காவலரே படுகாயமடைந்த நிலையில் புத்தல (12ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் செல்லும் ஜனாதிபதியின் அணியில் முதலமைச்சர் பிள்ளையான்?

கொழும்பு, மே 21

அடுத்தமாத முற்பகுதியில் லண்டனுக்கு விஜயம் செய்யவிருக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மோடு கிழக்கு மகாண முதலமைச்சர் பிள்ளையானையும் லண்டனுக்குக் கூட்டிச்செல்லத் திட்டமிட்டுள்ளார் என இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

பொதுநல அமைப்பு நாடுகளின் தலைவர்கள் கூட்டத்தில் பங்குபற்றுவதற்காக லண்டன் செல்லும் ஜனாதிபதி, தமது அணியில் கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சரையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

லண்டனில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல கூட்டங்களில் பிள்ளையானைக் கலந்துகொள்ளச் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்றும் மேற்படி

(12ஆம் பக்கம் பார்க்க)

### கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து

## மன்னார் சுற்றிவளைப்பில் 36 பேர் தடுத்துவைப்பு!

மன்னார், மே 21

மன்னார்,செளத்பார் இராணுவக் காவலரண் மீது நேற்று அதிகாலை 1.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் கைக்குண்டுத் தாக்குதலை அடுத்து அதிகாலை 4.00 மணி முதல் செளத்பார் மற்றும் நளவன் வாடிப் பகுதிகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் 36 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நீதி அமைச்சின் செயலாளர் இன்று யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம் , மே 21

நீதி அமைச்சின் செயலாளரும் புனர்வாழ்வு ஆணையாளருமான சுகத கம்லத் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்து நீதிமன்றக் காவலில் புனர்வாழ்வு நிலையங்களில் வைக்கப்பட்டுள்ளவர்களை இவர் நேரில் சந்தித்து அவர்களின் நிலைமை குறித்து ஆராய்வார்.

யாழ். சிறைச்சாலை மற்றும் மேல் நீதிமன்றத்தில் அமைந்துள்ள புனர்வாழ்வு நிலையங்களை அவர் பார்வையிடுவார் என்றும் காரைநகரில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள புனர்வாழ்வு நிலையத்தையும் பார்வையிடுவார் என்று அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

யாழ். தொழில்நுட்பக்கல்லூரிக்கும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசேட அதிரடிப்படை மீது அம்பாறையில் தாக்குதல்!

கொழும்பு, மே 21

அம்பாறை ரூபாஸ்குளம் பகுதியில் உள்ள விசேட அதிரடிப்படையினரின் முகாம்மீது நேற்றுக்காலை 6.10 மணியளவில் விடுதலைப் புலிகள் சிறிய ரகத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தி மேற்கொண்டனர் எனக்கூறப்படும் தாக்குதலில் விசேட அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்தார் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட பதில் தாக்குதலில் புலிகள் பின்வாங்கிச் சென்றனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது.

காயமுற்ற அதிரடிப்படைச் சிப்பாய் அம்பாறை அரச வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## கண்ணீர் காணிக்கைகள்

எமது சக நிறுவனம் PC Paradise இல்
உதவி கணனி தொழிநுட்பவியலாளராகக் கடமையாற்றிய

### ஜெயக்குமார் ஜெய்தீஸ்



அவர்களின் அகால மரணச் செய்தி கேட்டு IIS சமூகத்தினர் ஆகிய நாம் கலங்கி நிற்கின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபதினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இயக்குநர்.
உத்தியோகத்தர்கள். விரிவுரையாளர்கள். ஊழியர்கள்.

IIS IIS CITY CAMPUS IBMS

## மரண அறிவித்தல்

### சிங்கராசா செல்லம்மா

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா செல்லம்மா 19.05.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராசாவின் மனைவியும், கனகராசா, புவனேஸ்வரி, மகேஸ்வரி, சௌந்தராஜன் ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயதேவி, சண்முகலிங்கம், அரியதாஸ், அம்பிகா ஆகியோரின் மாமியும், மாதவகாளிதாசன், கஜேந்திரன், சுஜேந்திரன், கரீந்திரன், வாசுகி, ஜானகி, கார்த்திகா, அனிதா, சேயோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2008) வியாழக்கிழமை வத்தளை மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கெரவலப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சண்முகலிங்கம் (மருமகன்)
(72944) 0777521316, 0114978993.

## தவறிவிட்டது

பொன்னுத்துரை பார்த்தீபன் என்பவருடைய தே.அ.அட்டை இல. (803523763V), விசேட அடையாள அட்டை இல. (0902006532) என்பன 16.05.2008 அன்று மருதானார்மட சந்தையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பாரதி வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

T.P. 0776621845, 0776210000.

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

மயிலிட்டி, பலாலி என்ற விலாசமுடைய (497253705V) என்ற இலக்கமுடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. தொடர்பு:- கஜமுகன் பல்பொருள் வாணிபம், அளவெட்டி தெற்கு (அருணோதயக் கல்லூரி அருகாமை).

## கல்வி அதிகாரிகளுக்கான இருநாள் அனர்த்த விழிப்புணர்வுச் செயலமர்வு

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் "யுனிசெவ்" அமைப்பின் அனுசரணையுடன் அனர்த்த விழிப்புணர்வுச் செயலமர்வு இன்று புதன்கிழமையும் நாளையும் சிவகுருநாதர் வீதியில் உள்ள உதயன் தங்ககத்தில் இடம்பெறவுள்ளது.

இச்செயலமர்வில் வலயங்களில் பணிபுரியும் ஆரம்பகல்வி ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கண்ணிவெடி அனர்த்த பாதுகாப்பு கல்வி தொடர்பாக இச்செயலமர்வின் விளக்கமளிக்கப்படும் என மாகாணக் கல்வித்திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நேற்றைய உதயனில் இது சம்பந்தமாக வெளிவந்த செய்தியில் செயலமர்வு நேற்றும் இன்றும் நடைபெறும் என்று குறிப்பிட்டிருந்தது தவறு. (அ-1)

## வவுனியாவில் கிரனேட் வீச்சு! மூன்று பொலிஸார் படுகாயம்!!

வவுனியாவில் மதவாச்சி - மன்னார் வீதியில் செட்டிக்குளம், மனிக்பாம் பகுதியில் உள்ள பொலிஸ் காவல் நிலை மீது நேற்றுக்காலை 7.45 மணியளவில் விடுதலைப் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸார் மூவர் படுகாயமடைந்தனர் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைப்புத் தேடுதல்களை மேற்கொண்டனர் என்றும் படைத்தரப்பில் மேலும் கூறப்பட்டது. (சி)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ். உதைபந்தாட்ட லீக் நாவாந்துறை கலைவாணி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 7 வீரர்கள் கலந்துகொள்ளும் விலகல் முறையிலமைந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது கால் இறுதி ஆட்டங்கள் இன்று புதன்கிழமை நடைபெற உள்ளன. இன்றைய ஆட்டங்களில் மோதும் அணிகள் வருமாறு:

✱ பி.ப. 3.00 - பாடுமீன் 'ஏ' அணி எதிர் சென் றோக்ஸ் 'ஏ' அணி

✱ பி.ப. 4.00 - சென்றோக்ஸ் 'பீ' அணி எதிர் சென் நீக்கிலஸ் 'ஏ' அணி. (1-51)

✱ ✱ ✱

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (1-86)

## கண்ணீர் அஞ்சலி



### ஜெயக்குமார் ஜெய்தீஸ்

[உதவிக் கணனி தொழில்நுட்பவியலாளர்]

எமது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு தோளோடு தோள் நின்று உழைத்த எமது அன்புத் தோழனின் பிரிவுச் செய்தியை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

எமது நண்பனின் பிரிவால் மீளாத்துயரில் ஆழ்ந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

PC Paradise
61, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (சி/552923)

தகவல்:
K.ரமேஷ் (முகாமையாளர்),
ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னையா இலட்சுமி

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா இலட்சுமி நேற்று (20.05.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், தவஞானேஸ்வரியின் (லண்டன்) தாயாரும், பொன்னுத்துரை, கந்தசாமி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், செவ்வந்தி, ஆர்த்திகா, கிரிதன், பிரியன் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், கோப்பாய் வடக்கைச் சேர்ந்த இரத்தினம், குமாரசாமி, ஆச்சிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, அரசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2008) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ராதம்பூ,
கோப்பாய் வடக்கு. (74357)

தகவல்:
சரவணமுத்து இரத்தினம்
(சகோதரன்).

### ஜெயக்குமார் ஜெய்தீஸ் [லக்ஷசன்]



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயக்குமார் ஜெய்தீஸ் (லக்ஷசன்) நேற்றுமுன்தினம் (19.05.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கிருஸ்ணகுட்டி ஜெயக்குமார் மற்றும் - திரேசா புஸ்பராணி தம்பதியினரின் அன்பு மகனும், காயத்திரி, ஜெயத்திரி, ரம்மியா, ரமணியா, ஆகியோரின் அன்புச் சகோதரனும் உதயகுமார் (வவுனியா), சந்திரகுமார், சுகுமார், பிறேம்குமார்(ஜேர்மனி), தவக்குமார், செல்வராணி, இருதயராணி, சந்திரா ஆகியோரின் பெறாமகனும் தில்லைநாதன், லோகநாதன், சூரியகுமாரி, விஜயகுமாரி, கிருஸ்ணகுமாரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று (21.05.2008) புதன்கிழமை பி.ப 2மணிக்கு யாழ். புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெற்று, புனித மரியன்னை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

447, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

தகவல்:
கி.ஜெயக்குமார்
(தந்தை)

### கந்தன் கதிரவேலு



சரசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கதிரவேலு 18.05.2008 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் லீலாவதியின் அன்புக் கணவரும், அகிலா, கோகிலா, நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆனந்தகுமாரின் அன்பு மாமனும், அருணின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2008) புதன்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
அமுதா ரெயிலர்,
இந்துக் கல்லூரி ஒழுங்கை
உரும்பிராய் வடக்கு. (74357)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.


## இதோ உங்களுக்காக...!

**MP4 PLAYERS** Orange



• 2 GB (Expand 2 GB)
• Camera • FM Radio
• MP3 • Games
• Voice Recording
• USB Cable • Power Charger
• Head Phone • Driver CD

10,500/-

**MP3 PEN DRIVE** Orange



• 1 GB (Data) • FM Radio
• MP3 • Voice Recording
• USB Cable
• Head Phone

6,250/-



• 1 GB • FM Radio
• MP3 • USB Cable
• Head Phone

4,750/-

MP3 / FM Radio Player for Vehicles 3,800/-



Asus F5R Notebook
Processor : Intel Core Duo 1.73 GHz RAM : 1GB HDD : 160GB
Screen : 15.4"WXGA CD/DVD : DVD/RW VGA : 319MB
OS : Vista Home Basic WiFi / Built-in Webcam / Bluetooth / Card Reader / Optical Mouse / All Driver CDs / Bag

**ACCESSORIES**
LQ 300 + II Epson Printer - 21,000/-
Internal TV Card - 3,300/-
External TV Card - 3,400/-
LCD TV Card - 4,900/-
56 K Modem - 950/-
Woofer 2.1 - 2,500/-
Woofer 2.1 Logitec - 3,600/-
Creative 5.1 - 8,500/-
128 SD RAM - 1,300/-
512 Kingston DDR I - 3,500/-

**HARD DISK**
40 GB IDE - 3,500/-
80 GB SATA - 4,900/-
160 GB SATA - 5,900/-
250GB IDE / SATA - 8,400/-

**MONITORS**
View Sonic 15" Silver Black CRT - 12,900/-
Samsung 15" Black CRT - 11,250/-
View Sonic 17" Silver Black CRT - 16,400/-
View Sonic / Daewoo / Samsung 15" LCD - 19,500/-
View Sonic 17" Wide Screen LCD - 23,700/-

**MOTHER BOARD**
MSI DDR II Intel - 5,750/-
Foxconn DDR II Intel - 6,300/-
Asrock DDR II - 6,200/-
Intel Original 945 GCNL - 8,650/-
Asus - P5GC-Max 1333 - 7,400/-
Energy 478 - 6,500/-

**UPS**
East / Mercury - 5,800/-
Powertree (1.2 KV) - 12,900/-

**TONER (Original)**
HP Toner 12 A - 5,250/-
HP Toner 15 A - 5,300/-
HP Toner 13 A - 5,300/-
HP Toner 49 A - 5,300/-

**DVD WRITER**
Samsung SATA - 3,900/-
Sony - 4,450/-
Asus Light Scribe - 4,500/-
Combo - 3,400/-

* Warranty valid for 1 - 3 years

1GB Kingston DDR - II Ram - 2750/=, Creative 2.1 Bofer (SB 5380) - 3800/=
Intel 2.0 Dualcore Processor - 8600/=, Samsung 17" Black CRT - 14, 500/=
Intel 2.2. Core 2D 40 Processor - 14,900/=
Sun Sonny PS2 Board- 550/=

**MUSIC WORLD & COMPUTERS**
141 B, பலாலி வீதி, தபால்பெட்டி சந்தி, திருநெல்வேலி. 021 222 6554
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவமனைகளில் சிகிச்சை பெறவரும் நோயாளரது சிறுதேவைகளைத் திணைக்களம் பூர்த்தி செய்யாது

## அவ்வாறு எதிர்பார்ப்பது தவறு என்கிறார் சுகாதாரப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம்,மே21

மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற வரும் நோயாளர்களுக்கு அவசரமாக ஏற்படும் சிறுசிறு தேவைகளைத் திணைக்களம் பூர்த்தி செய்யுமென எதிர்பார்க்க முடியாது.

இவ்வாறான அவசர தேவைகளை அந்தந்தப்பிரதேச மக்களேமேற்கொள்ளவேண்டும்.

மக்களின் ஒத்துழைப்பினை மருத்துவ மனை அபிவிருத்திச் சங்கங்கள் பெற்று மேற்கொள்வது பொதுமக்களுக்கு ஏற்படும் சுமைகளை குறைக்கக் கூடியதாக இருக்கும்.

நோயாளர்களுக்குத் தேவையான பொருள்களை ஒரு சில மருந்தகங்களிடம் பெற வேண்டியநிலை இவ்வாறான சபைகளுக்கு ஏற்படுகிறது. இந்நிலை மாறி இது பிரதேச மக்களுக்குரிய வைத்தியசாலை என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

இங்கு வருவோர் உங்களது உடன்பிறப்புகள். இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது எமது பொறுப்பு என்ற எண்ணம் ஒவ்வொருவரின் மனதிலும் தோன்ற வேண்டும்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் கொடிவார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் உரையாற்றுகையில்:-

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலை ஆதார வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்படபோதிலும் அதற்கேற்ப வளப் பற்றாக்குறையாக உள்ளதை அறிவேன்.

கட்டடப் பற்றாக்குறை, உத்தியோகத்தர், ஊழியார் பற்றாக்குறை, மருத்துவ சாதனப் பற்றாக்குறை ஆகியவற்றை நீக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

**கட்டட வேலைகளைப் பூர்த்தியாக்க...**

வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு அரைகுறையாக உள்ள நிர்வாக அலகு மற்றும் வெளிநோயாளர் பிரிவு ஆகிய கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு 40 மில்லியன் ரூபாவினை 'நிக்கொட்' நிறுவனத்தினர் வழங்கவுள்ளனர்.

அத்துடன் திணைக்கள நிதி உதவியுடன் ஆண்கள் விடுதியினைப் புனரமைக்கவும் வளாகத்திற்கான மதிலை அமைக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதும் ஏனைய கட்டட வேலைகளை நிறைவேற்றுவதற்கு நிதி வழங்க ஜப்பானிய எவ் ஐடிஆர் (FIDR) நிறுவனம் சம்மதம் தெரிவித்துள்ளது.

எனினும் அடுத்த வருடத்திற்குள் இந்த வைத்தியசாலையின் பெரும்பாலான பற்றாக்குறைகள் நிவர்த்தி செய்யப்படுமென நம்பிக்கையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன் - என்றார்.

சபைத் தலைவர் மு.நாகேந்திராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநி வாசன், யாழ்.செயலக முன்னாள் திட்டப் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் உட்பட பலர் உரையாற்றினார். (203-207)

# கடல் உணவுகளின் விலைகள் அதிகரிப்பு

குருநகர், மே 21

யாழ்ப்பாணத்திலுள்ளசந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் உயர்வடைந்துள்ளன.

குடாக்கடலில் பகல் நேர மீன்பிடித்தலே தொடர்ந்து நடைபெற்று வருவதுடன் மட்டுப்படுத்தப்பட்ட கடற்பரப்பிலேயே மீன்பிடித்தல் அனுமதிக்கப்படுகிறது.

சிறிய மீன்களே சந்தைகளில் சந்தைப் படுத்தப்படுகின்றன. பெரிய மீனினங்கள் குறைவாக பிடிக்கப்பட்டு சந்தைப்படுத் தப்படுவதனால் அவற்றின் விலைகள் உயர்வாக உள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் ஒரு கிலோ மீன் 500 ரூபா தொடக்கம் 600 வரையிலும் இறால் ஒரு கிலோ 350 தொடக்கம் 400 ரூபாவரையும் விற்பனை செய்யப்படுகின்றது. (203-51)

# அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டிகள் கொழும்பில் நான்கு பாடசாலைகளில் நடைபெறும்

அச்சுவேலி, மே 21

அகில இலங்கைத் தமிழத் தினப் போட்டிகள் 24ஆம், 25ஆம் திகதிகளில் கொழும்பில் நான்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

2007ஆம் ஆண்டுக்கான தமிழ் மொழித் தினப் போட்டிகள் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி, முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

தமிழ் மொழித்தின ஆரம்ப நிகழ்வுகளில் பிரதிக் கல்வி அமைச்சர் எம்.சச்சிதானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு போட்டிகளை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராசா, மேலதிக செயலாளர் டபிள்யூ.ஏ.தர்மதாச, கல்வி அமைச்சின் ஜனாதிபதி ஆலோசகர் உமாரியோ கஸ்ரப் தேரோ ஆகியோர் கலந்துகொள்வர்.

போட்டிகளில் கலந்துகொள்ளும் வெளி மாவட்ட மாணவர்கள் மற்றும் அவர்களை அழைத்துவரும் ஆசிரியர்கள் தங்குவதற்கான ஏற்பாடுகள் மற்றும் அவர்களுக்கான உணவு வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக தமிழ்த் தினப்போட்டிகளுக்குப் பொறுப்பான கல்விப்பணிப்பாளர் எஸ்.இதயராசா தெரிவித்தார்.

போட்டிகளில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் போட்டிகளில் கலந்து கொண்ட சகல மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

போட்டிகளில் கலந்து கொள்ளச் செல்லும் மாணவர்கள்- ஆசிரியர்கள் தமது வருகை தொடர்பான பதிவுகளை போட்டிகள் நடைபெறும் தினத்துக்கு முன்தினமே மேற்கொண்டு போட்டிகளில் பங்கு கொள்வது தொடர்பான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (203-11)

# வலி.கிழக்கில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட ஒன்பது குடும்பங்களுக்கு 30ஆயிரம் ரூபா வீதம் நிதி

அச்சுவேலி, மே 21

வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவில் கடந்த வருடம் பெய்த மழை வெள்ளத்தினால் வீடுகளை இழந்த 9 குடும்பங்களுக்கு குடிசை வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கு தலா 30ஆயிரம் ரூபா வீதம் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

குடிசை வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு வடக்கு மாகாண சமூக நலத்துறை திணைக்களம் 30ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ள நிதி இரண்டு கட்டங்களாக பயனாளிகளுக்குக் கைளிக்கப்படவுள்ளது.

முதலாம் கட்டமாக 10ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டமாக 20ஆயிரம் ரூபாவும் நிதி கையளிக்கப்படவுள்ளது.

ஊரெழு கிராம சேவையாளர் பிரிவில் 5 குடும்பங்களுக்கும், அச்சுவேலி, இடைக்காடு, வாதரவத்தை, உரும்பிராய் பகுதியில் தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

குடிசை வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு முதலாம் கட்டமாக வழங்கவுள்ள நிதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் குறித்த 9 குடும்பத் தலைவர்களிடமும் பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் இந்த நிதியை வழங்குவார் என்றும் கோப்பாய்ப் பிரதேச செயல சமூக சேவைகள் அலுவலர் வே.தபேந்திரன் தெரிவித்தார். (203-11)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

# வடமராட்சி சோளங்கன் கிராம அபிவிருத்திக்கு இலங்கை வங்கி ரூ.2.3 மில்லியன் ஒதுக்கீடு

கரவெட்டி, மே 21

வடமராட்சி, கரவெட்டி சோளங்கன் கிராமத்திற்கு 2.3 மில்லியன் ரூபாவை இலங்கை வங்கி ஒதுக்கியுள்ளது.

பின் தங்கிய கிராமமான இந்தக் கிராமத்தின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்டே இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராம மக்களின் விவசாய முயற்சிகளுக்கு உதவும் வகையில் இந்த உதவி செய்யப்பட்டுள்ளது.

வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் என்.சிவரட்ணம் இவ்வாறு தெரிவித்துள்ளார். நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

கிராமங்களை அபிவிருத்தி செய்து கிராம மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இலங்கை வங்கி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

இத்திட்டத்தின் ஒரு பிரிவாகவே சோளங்கன் கிராம அபிவிருத்திக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராமம் வடபிராந்தியத்திலேயே முதலாவது இலங்கை வங்கிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இக்கிராம மக்கள் தமது தேவைகள் அடங்கிய மகஜரை என்னிடமும், பிரதேச செயலரிடமும் வழங்கியுள்ளனர்.

இத்திட்டத்திற்கு வங்கிக்கான ஒத்துழைப்பை இக்கிராம மக்கள் வழங்க வேண்டும். இவர்களின் செயற்பாடுகளுக்காக மிகக் குறைந்த வட்டியுடன் கடன் வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

இக்கிராமம் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து சிறந்த கிராமமாக மிளிர வேண்டும். இதுவே எதிர்பார்பாகும்- என்றார்.

இந் நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்குப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், இலங்கை வங்கி நெல்லியடிக் கிளை முகாமையாளர் வி.தில்லைநாதன் உட்பட பலர் உரை நிகழ்த் தினர். (203-70-218)

# வாகன விபத்தில் வயோதிபர் மரணம்

வடமராட்சி, மே 21

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி வீதியால் நெல்லியடி நோக்கிச் சென்ற வயோதிபர் ஒருவர் வாகனம் ஒன்றினால் மோதுண்டு வீதியில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இச்சம்பவம் கடந்த வெள் ளிக்கிழமை இடம் பெற்றது.

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த பரமு கணபதிப்பிள்ளை (76வயது) என்பவரே இவ்வாறு இறந்து கிடக்கக் காணப்பட்டவராவர்.

இவரது சடலம் உறவினரால் அடையாளம் காணப்பட்டு பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

எனினும் சம்பவத்தில் இறந்தவரின் மரண விசாரணையை திங்கட்கிழமையே நடத்துவதற்கு ஏற்பாடாகியது.பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான்,- இறந்த வயோதிபரை மோதி விட்டுச் சென்றதாகக் கூறப்படும் வாகனச் சாரதியைக் கைது செய்து சாரதியையும், வாகனத் தையும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்துமாறு நெல்லியடிப் பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்தார். (01-160)

# கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆண்களுக்கான மலசல கூட வசதி இல்லை

## இதனால் மாணவர்கள் பெரும் சிரமம்

யாழ்ப்பாணம், மே 21

கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் ஆண்களுக்கான மலசலகூட வசதி இல்லாமையால் அங்கு கற்கும் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

தரம் ஒன்று தொடக்கம் 11வரையான வகுப்புகள் நடைபெறும் இப்பாடசாலையில் பெண்களுக்கான மலசலகூடம் மட்டுமே உள்ளதாகவும் இதனால் ஆண்கள் பாடசாலைக்கு வெளியே சென்றே இயற்கைக் கடன்களைக் கழிப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனால் பாடசாலைக்கு வெளியே உள்ளவர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படுவதாக பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை எந்த விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கல்விச் செயற்பாடுகளில் முன்மாதிரியாகத் திகழும் இப்பாடசாலையில் இது பெரும் குறையாகவே இருந்து வருகின்றது என்று பெற்றோர் விசனம் தெரிவித்தனர்.

இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் விரைந்து மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுள்ளார். (203-288-207)




வலிகாமம் வலய முறைசாராக் கல்விப் பிரிவால் 'யுனிசெவ்' அனுசரணையுடன் பாடசாலை செல்லாத, இடை விலகியமாணவர்களை இனங்கண்டு அவர்களுக்குக் கல்வி வழங்கும் செயற்றிட்டத்தை முன்னெடுக்கும் நோக்குடன் சுன்னாகம் சபாபதிப்பிள்ளை முகாமில் உள்ள பெற்றோர், பிள்ளைகள் ஆகியோருக்கு விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

நிகழ்வில் 'யுனிசெப்' செயற்றிட்ட அலுவலர் பிறிக் உரையாற்றுவ[illegible] செய்வதையும் வலிகாம வலய செயற்றிட்ட அலுவலர் ற.சண்முகராசா, எழுத்தறிவூட்டல் ஆசிரியர் த.மகாதேவன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் முதலாவது படத்தில் காணலாம். நிகழ்வில் கலந்து கொண்டோரை இரண்டாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சியப் புரட்சியினால் சிதைவடைந்த சமூகத்துக்கு புத்துயிர் கொடுத்தவர் புனித யூஜின் டி மசெனெட்



அமலமரித் தியாகிகள் முறவற சபையைத் தொடங்கிய புனித சாள்ஸ் ஜோசவ் யூஜின் டி மசெனட் 1782 ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் நாள் பிரான்ஸ் நாட்டில் உள்ள எக்ஸ் என் புறொவான்ஸ் எனும் ஊரிலே பிரபுக்களின் குடும்பத்திலே பிறந்தார். உலக வரலாற்றிலே பற்பல புரட் சிகள் இடம் பெற்றுள்ளன. யூஜின் பிறந்த காலத்தில்தான் பிரான்சியப் புரட்சி நடைபெற்றது. இப் புரட்சியின் காரணமாக சிறுவன் யூஜின் தனது எட்டாவது வயதிலே நாடு கடத்தப் பட்டார். பிரபுக்களின் குடும்பத்திலே பிறந்த கோமகன் நாடுவிட்டு நாடு அலைந்து அகதி வாழ்க்கை நடத்தினார். இந்த அகதி வாழ்வின் கனாகனம் எங்கள் ஒவ்வொரு வருக்கும் புரியாததொன்றல்ல. தனது சுகபோகவாழ்வு, சுற்றத்தார், பெற்றோர், உறவுகள் எல்லாவற்றையும் இழந்தார். பிரான்சியப்புரட்சிமுடிவிற்கு வர 1802 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 24 ஆம் திகதி தனது இருபதாவது வயதில் தாயகம் திரும்பினார். தாய்த்தேசம் திரும்பியவர் தனது நாடு சீர்கெட்டுச் சிதைவடைந்து, தன் சொந்த மக்கள் தங்களது உரிமைகள் அனைத்தையும் இழந்திருப்பதையும் கண்டார். இத்தகைய நிலையில் தன் பணிதனின் தேவையை உணர்ந்தார். ஆண்டவர் அழைப்பின் குரல் கேட்டு 1808 ஆம் ஆண்டு ஒக்டோபர் 12 ஆம் திகதி பாரிசிலுள்ள புனித சள்ப்பிஸ் குருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். அருட்பணிக்குள்ளே அடிகளாரின் ஆன்ம வழி காட்டல் மூலம் இந்த இளையபிரபு எடுத்துக்காட்டான வாழ்க்கை நடத்தினார். 1810 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தியாக் கோனாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1811 ஆம் ஆண்டு டிசெம்பர் 21 ஆம் திகதி இறைவனின் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார். பலபெரிய பதவிகளுடன் கூடிய பணிகள் காத்திருக்க தனக்குத் தாழ் மையும், எளிமையுமான பணி வேண்டு மெனக் கேட்டுப் பெற்றுக்கொண்டார். இவ்வாறாகத் தம் சொந்த ஊரிலே பெரும் பணி செய்தார். எல்லாமக்களும் புரிந்து கொள்ளும் வகையில் தனது மறையுரைகளை நடத்தினார். பிரான்சியப் புரட்சியி னால் நலிவுற்று, சிதைவடைந்து சின்னா பின்னமாக்கப்பட்ட சமூகத்திற்குப் புத்துயிர் அளிக்கத் தம்மால் இயன்றளவு உழைத்தார். எல்லோராலும் கைவிடப்பட்டுச் சிறைகளிலும் வைத்தியசாலைகளிலும் வருந்திக் கொண்டிருந்தவர்களை அணுகிப் பணி செய்தார். பல்வேறுபட்ட குழப்பங்களால் அலைந்து திரிந்த இளைஞர்களை ஒன்று சேர்த்து "கிறிஸ்தவ வாலிப இயக்கம்" என்ற இயக்கத்தை ஆரம்பித்தார். தான் போதித் தவற்றையே தன் வாழ்வாக்கினார்.

தனியே நின்று தன்னால் இப்பாரிய பணிகளைச் செய்ய முடியாது என்று உணர்ந்த யூஜின் தன்னைப்போல் பணி செய்யப்பல உள்ளங்களைத் தூண்டினார். தியாகச் சிந்தனைகொண்ட மறை மாவட்டக் குருக்கள் கூட இவரது இயக்கத்தில் சேர்ந்து கொண்டார்கள். எக்ஸில் ஒரு பழைய கார்மேல் மடத்தை வாங்கி அங்கு ஒன்று கூடினர். "புறொவான்சின் மறைபரப்பாளர் சபை" என்ற நாமம் சூட்டி அங்கத்தவர் களின் குரும வாழ்வு, கிராமங்கள் தோறும் தியானங்கள் நடத்தி நற்செய்தி அறிவிப்புப் பணிசெய்தல், இளைஞர்களுக்கு வேண்டிய மறைப ணிகள் புரிவது என்பவற் றைத் தமது முக்கிய நோக்கங்களாகக் கொண்டனர்.

**அமலமரித் தியாகிகள் சபையின் நிறுவுனரான புனித யூஜின் டி மசெனெட்டின் திருவிழா இன்று கொண்டாடப் படுகின்றது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது**

## அவர் நிறுவிய அமலமரித் தியாகிகளின் பணி யாழ். மண்ணில் சிறப்பாகத் தொடர்கிறது

அந்த மறைமாவட்டத்திலே அங்கீகாரம் பெற்ற இச்சபையை முழுத் திருச்சபையும் அங்கீகரிக்க வேண்டும் என்ற ஆவல் கொண்ட யூஜின் இச்சபையின் நோக்கம், வாழ்வு என்பவற்றைச் சபைச் சட்டமாக எழுதினார். யூஜின் தலைமையில் 1826 ஆம் ஆண்டு பெப்ரவரி 17 ஆம் நாள் திருத் தந்தை பன்னிரண்டாம் லீயோ அவர்களி னால் "அமலமரித் தியாகிகள்" எனப் பெயர் சூட்டப் பட்டு ஒரு துறவற சபையாக அங்கீகரிக் கப்பட்டது. 1832 ஆம் ஆண்டு ஒப்டோபர் 14 ஆம் நாள் அருட்பணி யூஜின் டி மசெனெட் உரோமபுரியிலே ஆயராகத் திருநிலைப் படுத்தப்பட்டார்.

அமலமரித்தியாகிகளின் பணிக்களம் விரிவடைந்து சென்றது. யூஜின்காலத்திலேயே அதாவது சபையிலே அங்கத்தவர்கள் அரிதாகக் காணப் பட்ட காலத்திலேயே ஆயர் பெற்றாக் கினியின் வேண்டுதலுக்கு ஏற்ப நான்கு அமலமரித் தியாகிகளை 1847 ஆம் ஆண்டு ஈழத்திருநாடாம் இலங் கைத்தீவிற்கு அனுப்பி வைத்தார். இந்த மறைதூதுப் பணியளாளர்கள் இலங்கையின் பற்பல பாகங்களிலே பணியாற்றினார்கள். விசேடமான எம் யாழ். மண்ணிலே சிறப்பாகப் பணியாற்றினார்கள்.

"நன்று நன்று நம்பிக்கைக்குரிய நல்ல ஊழியனே" என்ற இறைவன், 1861 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி இவரை விண்ணகத திற்கு அழைத்துக் கொண்டார், 1975 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19 ஆம் திகதி தாய்த்திருச்சபை இம்மா மனிதருக்குமுத்திப்பேறு பெற்ற பட்டம் அளித்து, 1995 ஆம் ஆண்டு டிசெம்பர் 3 ஆம் திகதி புனிதர் நிலைக்கு உயர்த்தியது. இவ்வாறாகத் தம்பணியின் மூலம் தன்னுடைய வாழ்வையே எங்களுக் குத்தந்த புனித யூஜின் டி மசெனெட்டின் பரிந்துரையும், பாது காவலும் வேண்டி இறைத்தந்தையிடம் வேண்டுவோம். ✱

**யே. ஜெறால்ட், அ.ம.நி.**

---

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை நல்லம்மா

(பென்ஷன் அக்கா)



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரப்பிள்ளை நல்லம்மா (19.05.2008) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசுகாவலசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற ம. சிதம்பரப்பிள்ளை (சிங்கப்பூர் பென்ஷனியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை, வீரசிங்கம், குணரத்தினம், கனகாம்புசம், இரத்தினபூபதி, சீவரத்தினம் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற மயில்வாகனம், மற்றும் பத்மாவதி, இராஜமலர், மனோகரன், மகேந்திரன் (பட்டு) ஆகியோரின் அன்புத் தாயும் தில்லைநாயகி, நடராசா சிவபாக்கியம், மனோன்மணி ஆகியோரின் அன்பு மாமியும் மனோகரி, மனோகரன், மனோரூபி, மனோசீலன், மனோவர்ணி, மனோவர்ணன் நவீந்திரா, நந்தினி, நவீந்திரன், நரேந்திரன், நளினா, வனிதா, வத்சலா, நிரஞ் சனா (ஆசிரியை, நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), நிதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (21.05.2008) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வேலடி ஒழுங்கை,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (74342)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## தவறிவிட்டது

சிங்கராஜா சபேசன், 93, நாயன்மார் கட்டு எனும் விலாசமுடைய (810120428V) தேசிய அ.அட்டை யும் விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். (74346)

## வீடு விற்பனைக்கு

*இல. 50, பலாலி வீதி, உரும்பிராயில்*
(உரும்பிராய் சந்தியில் இருந்து புன்னாலைக்கட்டுவன் பக்கமாக 150 யார் தொலைவில்) சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: நிஷாடினி
இல.50, பலாலி வீதி, உரும்பிராய்.
தொ.பே.0774 611367 (74346)

## வீட்டுப் பணிப்பெண் தேவை

நோயாளியான பெண் ஒருவரைப் பராமரிப்பதற்கு பணிப்பெண் 35-50 வயதில் தேவைப்படுகிறார். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 077 3314262, 0777 142358
**சிவலிங்கம் பாமதி**
*அல்லையம்பதி, துன்னாலை, கரவெட்டி.* (74346)

---

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை



காரைநகர், சத்திரந்தை களபூமியைப் பிறப்பிடமாகவும் இல.43/1, மணல்தறை வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை இலட்சுமிப்பிள்ளை நேற்று (20.05.2008) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் (கொட்டைக்காட்டுச் சுப்பர்) தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் அமரர்களான முருகேசு (வையாபுரி)- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் மகேஸ்வரன், விக்கினேஸ்வரன் (லண்டன்), நட்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும் வசந்தாதேவி, புஸ்பராணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிருபாலினி, தமிழினி (மாணவிகள் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) தனுசிகன் (ஞானக்குழந்தை பாலர் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (22.05.2008) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.43/1, மணல்தறை வீதி,*
*கந்தர்மடம்.* (74384)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நடேசன்



அச்சுவேலியை, பிறப்பிடமாகவும், சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடேசன் அவர்கள் 16.05.2008 வெள்ளிக்கிழமை காலை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இசைமணி வி. நடேசன் (இசையாசிரியர், டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சிவக்கொழுந்து தம்பதியினரின் கனிஷ்ட புத்திரியும், திரு.திருமதி வேலுப்பிள்ளை நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், பாஸ்கர மூர்த்தி (முன்னாள் இலங்கை வங்கி), திவாகர மூர்த்தி, காலஞ்சென்றவர்களான கணேசமூர்த்தி, சிவமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, சர்வேஸ்வரியின் சகோதரியும் இராகவன், மௌலீஸ்வரி, ஸ்ரீகரன் (H.N.B), கேதீஸ்வரன், சக்தீஸ்வரி, குருபரன், கௌரீஸ்வரி, சிவசங்கரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சச்சிதானந்தராஜா (டாக்டர் கண்ணா), சற்குணானந்தன், செல்வலிங்கம், ராஜாலஷ்மி, வாசுகி, ரமணி, குமுதினி, வைதேகி ஆகியோரின் மாமியும், மீனாசதீசன், விஸ்ணு பிரியா, ஸ்ரீராம், ரூபன், மயூரன், கார்த் திகன், ஹரீந்திரன், சுதன், சாரங்கன், சஞ்சயன், வாகினி, விஷ்வேஸ், விநோதன், அஞ்சலி, வைஷ்ணவி, ஆரபி, ஆதிரை, அர்வின், பிரவீன், அபிராமி ஆகியோரின் பாசமிகு பாட்டியும் அத்விகாவின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் 21.05. 2008 புதன்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தகவல்:*
மகன், மகள், மருமக்கள்
வே.ந. ஸ்ரீகரன்
76/2, 2/2 W.A. சில்வா மாவத்தை,
கொழும்பு - 6
2586171/ 060 2194834/ 2735159

Ragavan Nadesan
14, Maston Crest, Markham, o,
L3R1A, Canada.
T.P - 905 940 6752/940 0354

---


# COMPUTER EXPRESS

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

# 15, Sirambiyadi lane, Jaffna. *Branch:* #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE 021 222 8250, 0777222422

80% Off

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008

| Course | Duration | Old price | Price |
|---|---|---|---|
| Diploma in Computer Science | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Honours Diploma in Computer Science | 5 Months | ~~13,000~~ | 2,600 |
| Diploma in Web page Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Graphic Designing | 4 Months | ~~10,750~~ | 2,150 |
| Diploma in Desktop Publishing | 4 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Hardware Engineering | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Auto CAD | 3 Months | ~~10,000~~ | 2,000 |
| Diploma in Microsoft office | 3 Months | | 1,500 |
| Accounting Package | 3 Months | ~~10,750~~ | 2,150 |

50% OFF **ADVANCE COURSES**

Diploma In Multimedia ~~5500~~ 2750
Diploma In Video Editing ~~6500~~ 3250

கம்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத செய்முறைப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :23/05/2008 9 AM
Batch II :24/05/200811AM
Batch III :25/05/2008 11AM
Batch IV :28/05/2008 9AM


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகூடிய பெற்றோலிய வளம் மத்திய கிழக்கில்; எனினும் விலையை நிர்ணயிப்பதில் அமெரிக்காவுக்கே பெரும் பங்கு

## காரணம்: 20க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அதன் கையில்!!

உலக வரலாற்றில் முதல் தடவையாக உலக சந்தையில் ஒரு பீப்பா மசகு எண்ணெய்யின் விலை 120 அமெரிக்க டொலர் வரை விலை உயர்ந்துள்ளது. தற்போதைய நிலை இதுவாயினும் எதிர்காலத்தில் மசகு எண்ணெய்யின் விலை மேலும் உயரக் கூடும் என உலகளாவிய ரீதியில் பரவலாக நம்பப்படுகின்றது.

இவ்விதம் இன்று பெற்றோலிய எரிபொருள் பிரச்சினை உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்திருப்பதால், பிரச்சினை காரணமாகப் பெற்றோலிய எரி பொருள் உற்பத்தி நாடுகளே அதிக பலனடையும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. 'ஒபெக் அமைப்பு' என அழைக்கப்படும் இந்நாடுகள் பெற்றோலிய எரிபொருள் வளம் காரணமாக அதிக இலாபத்தை ஈட்டிக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டிருக்கின்றது. அதேசமயம் உலகின் ஏனைய அபிவிருத்தி அடைந்த மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் இப்பிரச்சினை காரணமாக மட்டற்ற பொருளாதார மற்றும் நிதிப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது.

பெற்றோலிய எரிபொருள்களின் விலையைக் கட்டுப்படுத்துமாறு 'ஒபெக் அமைப்பு' நாடுகளிடம் அமெரிக்கா வேண்டு கோள் விடுத்து வந்த போதிலும் அதனைக் கணக்கில் எடுக்காது 'ஒபெக் அமைப்பு' நாடுகள் அடிக்கடி பெற்றோலிய எரிபொருள்களின் விலைகளை அதிகரித்த வண்ணமுள்ளன. இத்தகைய நிலையால் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்துள்ள பெற்றோலிய எரிபொருள் நிறுவனங்களது விவரங்களும் அவற்றின் உரிமையாளர்கள் குறித்த தகவல்களும் அண்மையில் விலாவாரியாக வெளிவந்துள்ளன. அவற்றின் முக்கிய அம்சங்கள் இங்கு தரப்படுகின்றன.

உலகின் அதிக கூடிய அளவிலான பெற்றோலிய எரிபொருள் உற்பத்தியாளர்கள் என்ற பெருமையை சவுதி அரேபிய எண்ணெய் நிறுவனம் கடந்த பல ஆண்டுகளாகத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. மாதமொன்றுக்கு 295 பில்லியன் பரல்கள் என்ற அளவில் பெற்றோலிய எரிபொருளை உற்பத்தி செய்யும், உலகின் முதல்தர நிறுவனம் எனப் பெயர் பெற்றுள்ளது 'அரம்கோ'. இந்த நிறுவனம் சவுதி அரேபிய இராச்சியத்திற்குச் சொந்தமானதாகும். 51 ஆயிரத்து 356 பேருக்கு மேற்பட்ட ஊழியர்கள் கடமையாற்றும் இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜனாதிபதி அப்துல்லா ஜுமா ஆவார்.

உலகில் பெற்றோலிய எரிவாயு தயாரிப்பில் ஈடுபட்டுவரும் முதல் பத்து பென்னம்பெரிய நிறுவனங்களில் சவுதி அரேபியாவின் 'அரம்கோ' நிறுவனமே முதலாவது இடத்தை வகித்து வருகின்றது.

### இரண்டாவது இடம் ஈரானுக்கு

ஈரானின் பெற்றோலிய அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் ஈரானிய பெற்றோலிய எரிபொருள் நிறுவனம், உலகின் அதிகூடிய அளவிலான பெற்றோலிய எரிபொருள் தயாரிப்பில் ஈடுபட்டுவரும் நிறுவனங்களுள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. மாதமொன்றுக்கு 287 பில்லியன் பீப்பாய்கள் எரிபொருளை இந்நிறுவனம் உற்பத்தி செய்துவருகின்றது. 1948 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனத்தின் இன்றைய நிர்வாகப் பணிப்பாளர் அந்நாட்டின் பெற்றோலிய உற் பத்தித் துறை அமைச்சர் கொலான் ஹுசேயின் ஆவார்.

### மூன்றாவது இடத்தில்

டோகா-கட்டார் இராச்சியத்துக்குச் சொந்தமான கட்டார் பெற்றோலிய நிறு வனம் உலகின் பெரிய உற்பத்தி நிறு வனங்களுள் மூன்றாவது மிகப் பெரிய நிறுவனமாகும். அப்துல்லா பின் ஹாமட் என்பவரின் தலைமையில் இந் நிறுவனம் இயங்குகின்றது.

### நான்காவது இடத்தில்

அபுதாபி அரசுக்குச் சொந்தமானது அபுதாபி தேசிய பெற்றோலிய உற்பத்தி நிறுவனம். இந் நிறுவனம் நான்காவது இடத்தில் உள்ளது. மாதமொன்றுக்கு 137 பில் லியன் பரல்கள் பெற்றோலிய எரிபொருளை உற்பத்தி செய் யும் இந்நிறுவனத்தின் தலைவர் ஷேக்- ஹலிபா- பின்-ஷெயிட் ஆவார்.

ஈராக் நாட்டின் தேசிய பெற்றோலிய எரிபொருள் உற்பத்தி நிறுவனம் ஈராக் அரசால் நிர்வகிக்கப்பட்டுவரும் நிறுவனமாகும். மாதமொன்றுக்கு 137 பில்லியன் பீப்பாய்கள் பெற்றோலிய எரிபொருளை உற்பத்தி செய்யும் இந்நிறுவனம் நான்காவது இடத்தை வகிக்கின்றது.

### 5ஆவது இடத்தில் ரஷ்யா

ரஷ்யாவுக்குச் சொந்தமானதும் 'அலெக்சி மிலர்' என்பவரின் தலைமையிலானதுமான 'காஸ்போம்' நிறு வனம் உலகின் மிகப் பெரிய பெற்றோலிய எரிபொருள் உற்பத்தி நிறுவனங்கள் வரிசையில் 5ஆவது இடத்தை வகிக்கின்றது. மாதமொன்றுக்கு 115 பில்லியன் பரல்கள் பெற்றோலிய எரிபொருளை இந்நிறுவனம் உற்பத்தி செய்கின்றது.



இவற்றைவிட குவைத் பெற்றோலிய நிறுவனம், வெனி சியூலா பெற் றோலிய நிறு வனம், நைஜீரிய தேசிய பெற்றோலிய நிறுவனம், லிபிய தேசிய பெற்றோலிய நிறுவனம் மற் றும் அல்ஜீரிய 'செனரச்' பெற்றோலிய நிறுவனம் என்பவையும் உலகில் மிகப் பெரும் பெற்றோலிய உற்பத்தி நிறுவனங்களாகும்.

### அமெரிக்காவிடம் 20க்கும் மேற்பட்ட பெற்றோலிய நிறுவனங்கள்

அத்தோடு நிற்கவில்லை. உலகில் மேலும் 103 பெற்றோலிய உற்பத்தி நிறுவனங்கள் இயங்கி வருவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களில் 20க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் அமெரிக்க அரசுக்குச் சொந்தமானவையாகும். இதன்படி உலகில் இன்று பெற்றோலிய எரிபொருள் விலையை நிர்வகிக்கும் விடயத்தில் கண்ணுக்குப் புலப்படாத விதத்தில் அமெரிக்காவின் கரம் பின்னணியில் செயற்பட்டு வருவதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு அமெரிக்க அரசுக்குச் சொந்தமான 20 பெற்றோலிய நிறுவனங்களில் ஒன்றின் தலைவராக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் செயற்படுகின்றார் என்பது குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

தமிழில்- பொன்லோஸ்.

## செஞ்சிலுவைச் சங்கம் எவ்வாறு தோன்றியது?



1859ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஒருநாள் - சொல்பெரினோ (solferino) போர் முடிவுற்றிருந்த வேளை. 15ஆயிரம் பேர் போர்க்களத்தில் இறந்தும் குற்றுயிரோடும் கிடந்தார்கள். மருத்துவர்கள் ஒரு சிலரே காணப்பட்டனர். காயமடைந்த பலரும் போதிய மருத்துவ உதவி கிடைக்க முன்னரே இறந்து போனார்கள்.

அந்தப் போர்க்களத்தின் வழியாக பயணம் செய்து கொண்டிருந்த ஹென்றி டுனாண்ட் (Henri dunant) என்ற சுவிஸ் நாட்டவரான இளைஞர் போர்க்களக் காட்சியையும் காயமடைந்து கிடந்தவர்கள் எழுப்பிய வேதனைக் குரல்களையும் பார்த்தும் கேட்டும் அதிர்ந்து போனார். உடனடியாக அண்மையிலிருந்த இத்தாலிய கிராமத்திலிருந்து பெண் தொண்டர்கள் குழுவொன்றை ஒன்று சேர்த்தார். அவரது ஆலோசனை மற்றும் வழிகாட் டலில் காயமுற்றவர்கள் பராமரிக்கப்பட்டார்கள். தாம் கண்ட கோரக்காட்சிகள் பற்றிய அறிக்கை ஒன்றை ஹென்றி டுனாண்ட் தயாரித்தார். போர்க்களங்களில் காயமுறுகிற வர்களை தேசிய வித்தியாசமின்றி பாதுகாப்பதற்கான ஓர் அமைப்பு உருவாக்கப்படு மானால் பல இறப்புக்களைத் தவிர்க்கலாம், துன்பங்களையும் வேதனைகளையும் குறைக்கலாம் என்று தெரிவித்தார்.

அவரது மனித நேய செயற்பாட்டின் விளைவாக 1864 ஆம் ஆண்டு ஜெனிவாவில் கூடிய 14 நாடுகளின் சர்வதேச மாநாட்டில் செஞ்சிலுவை உடன்படிக்கை கையெழுத்தாயிற்று. அந்த உடன்படிக்கை 1906 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டது. போர்க்காலத்தில் பொதுமக்களுக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துவது இதன் நோக்கம். நாடுகளில் நிவாரண சங்கங்களை ஏற்படுத்தி உதவுவதற்கு இந்த ஒப்பந்தம் வழி செய்கின் றது. சுவிஸ் நாட்டின் கொடியில் அதன் வர்ணங்கள் எதிர்மாறாக மாற்றப்பட்டு செஞ்சிலு வைச் சங்கத்தின் சின்னமாக ஏற்கப்பட்டுள்ளது. இதன்படி போர் நடக்கும் காலங்களில் அல்லது தேசிய பேரிடர்கள் நிகழும்போது பல்வேறு நாடுகள் ஒன்றிணைந்து மனித நேயத்துடன் பணியாற்றுகின்றன. போர்க்களத்தில் இந்தக் கொடியைக் காண்பவர் எதிரியோ நண்பரோ ஒரே விதத்தில் மதிப்பளிக்கிறார்.

-வல்லவன்-

## யுரேனியம் என்ன என்று அறிவீர்களா?

யுரேனியம்(Uranium) என்ற கதிரியக்கப் பொருள் பூமியில் பல மில்லியன் கணக்கான ஆண்டு காலமாக இருந்து வந்துள் ளது. ஆனால் அணுகுண்டைத் தயாரிக்க மனிதன் ஆரம்பிக்கும்வரை -அணு சக்தியை பயன படுத்தும் வரை அப்பொருள்கிடைக்கக் கூடிய தாய் உள்ளது என்பது எவருக்குமே தெரியாமல் இருந்துவந்துள்ளது.

யுரேனியம் என்பது ஒரு உலோகப் பொருள்- சுத்திகரிக்கப்படாத கனியப்பொருள். கனம்கூடிய இயற்கை சக்திக ளில் ஒன்று. மேர்க்குரி அல் லது வெள்ளி போன்ற பொருள்களை விட யுரேனியம் பூமியில் பொதுவாகக் கிடைக்கும் ஒன்றுதானாம். சில இடங்களில்- சாயிர், கனடா, அமெரிக்கா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளில் யுரேனியம் பெரும் அளவில் கிடைக்கின்றது.

சுத்தமான யுரேனிய உலோகத்தைப் பார்த்தால் அது பளிச்சிடுகின்ற வெள்ளியைப்போல் காணப்படும். ஆனால் ஒரு சில நிமிடங்கள் காற்று அதன்மீது படக்கூடியதாய் இருந்தால் பொலிவிழந்து போய் மண்ணிறமாகி விடும்.

அதன்மீது படரும் படலமானது உள்ளே இருக்கும் உலோகத்தைப் பாதுகாப்பதாய் அமையும். யுரேனியத்திற்கும் ஏனைய உலோகத்திற்கும் இடையிலான மிகப்பெரிய வித்தியாசம் என்னவென்றால் யுரேனியத்தில் இயல்பாகவே கதிரியக்கம் காணப்படுவதாகும். அதாவது இந்த உலோகமானது அதன் யுரேனிய அணுவிலிருந்து வெளிப்படும் சில கதிர்களை வெளியேற்றுவதன்மூலம் மெதுவாக மாற்றத்திற்குள்ளாகின்றது. அவைகள் அல்பா(Alpha), பீட்டா(Beta), கம்மா(Gamma) கதிர்கள் என்றழைக்கப்படும். இவ்வாறு கதிர் இயக்கத்தை வெளியேற்றுவதன் மூலம் யுரேனிய அணுவானது மாற்றமடைந்து வேறு ஒரு கதிரியக்க சக்தியாக உருவெடுக்கின்றது. இதுவும் மேலும் அதிகக் கதிர்களை வெளியேற்றி மாற்றமடைகின்றது. இவ்வாறு கதிரியக்க சக்தி இருக்கும்வரை இந்த செயற்பாடு தொடர்கின்றது.

இந்த வகையில் 14 படிகள் (கட்டங்கள்)உண்டு. முதல் கட்டத்தில் ரேடியம் உருவாகின்றது. இறுதிக் கட்டத் தில் ஈயம் உருவாகின்றது. அத்துடன் இந்த மாற்றமுறும் செயற்பாடு முற்றுப் பெற்றுவிடும். ஏனென்றால் ஈயத்தில் கதிரியக்கம் இல்லை.இயல்பாக யுரேனியம் ஈயமாக மாற்றம் பெறுவதாயின் பில்லியன் கணக்கான ஆண்டுகள் எடுக்குமாம்.

அணுகுண்டுகளில் அல்லது அணு உலைகளில் பயன்படுத்தப்படுவது U-235 என்பதாம். இது யுரேனியத்தின் இயற்கைத் தன்மைகளில் ஒன்று. இதனை இசடோப்(Isotop) என்றழைப் பார்கள். அணுசக்தி உற்பத்தியில் புளுட்டோனியம்(Plutonium) பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் இது மனிதனால் உருவாக்கப்பட்ட ஒரு யுரேனியமாகும்.

-பழநி

## இது ஒன்றே போதும்

கள்ளப் புலனைந்தும்
காக்க வழி தெரிந்தால்
தெள்ளத் தெளிவாகும்
இறைவன் திருவடிவம்
சொல்லிக் கொள்
எந்நாளும்
இறைவன் திருநாமம்
வையத்துள் உயிர்வாழ
இது ஒன்றே போதும்

## புதன் பொய்கை

## தத்துவமேதை ராதாகிருஷ்ணனின் நறுக்கான பதில்...!



இந்தியாவின் தலைசிறந்த தத்துவ மேதையான டாக்டர் இராதாகிருஷ்ணன் மேலை நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் போது தனது நாட்டின் தனித்துவத்தை விட்டுக் கொடுக்காதவராகவும் மேன்மையைப் போற்றுபவராகவுமே செயற்பட்டார்.

ஒரு சமயம் டாக்டர் இராதாகிருஷ்ணன் மேல்நாடொன்றிற்கு பயணம் மேற்கொண்டிருந்தார். அதன்போது பத்திரிகை நிருபர் ஒருவர் அவரிடம் இடக்காகக் கேள்வி ஒன்றைத் தொடுத்தார்.

"எங்கள் நாடுகளில் நாங்கள் எப்போதும் ஒரே நிறமாக இருக்கின்றோம். ஆனால் உங்கள் நாட்டில் சிலர் வெளுப்பாகவும் சிலர் கறுப்பாகவும் வேறு சிலர் ஒரு கலவையான நிறமாகவும் உள்ளனரே ஏன்?"என்றார்.

அதற்கு டாக்டர் இராதாகிருஷ்ணன் இடக்காகவும் அதேநேரம் தன் நாட்டின் பெருமையை விட்டுக் கொடுக்காமலும் "குதிரைகள் பல நிறங்களில்தான் உள்ளன. ஆனால் கழுதைகளோ ஒரே நிறமுடையனவாகவே உள்ளன" எனப் பதிலளித்தார்.

சூரியன்

## சிந்தனைக்குச் சில வரிகள்

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகக் கொடிய நோய் | - பேராசை |
| மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணல் |
| செய்யக் கூடாதது | - உபதேசம் |
| செய்ய வேண்டியது | - உதவி |
| நம்பக் கூடாதது | - வதந்தி |
| நழுவவிடக் கூடாதது | - வாய்ப்பு |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |

## 'நீண்டர்தால்' மனிதர்கள் யார்?



நீண்டர்தால் மனிதன் (Neanderthel Man) என்பவர் யார்? மனித இனம் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என் பதை அறிவதற்கு விஞ்ஞானிகள் சரித்திர காலத்திற்கு முந்தி வாழ்ந்த மனிதன் விட்டுச் சென்றுள்ள எச்சங்களைக் கிடைக்கும் அளவில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து பார்க்கிறார்கள். அம்மனிதன் விட்டுச் சென்றுள்ள ஆயுதங்கள், கருவிகள், சமையல் பாத்திரங்கள், எலும்புக் கூடுகள், சரீரத்தின் ஏனைய பாகங்கள் போன்றவை ஆராயப் படுகின்றன.

1956 ஆம் ஆண்டு ஜேர்மனியில் உள்ள நீண்டர் என்றழைக்கப்படும் மலை இடுக்குப் பள்ளத்தில் உள்ள சுண்ணாம்புக் கல் குகைக்குள்ளிருந்து மனிதர்களின் எச்சங்கள் தோண்டி எடுக்கப்பட்டன.

வரலாற்றுக்கு முந்திய மனிதர்களின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டமை இதுவே முதல் சம்பவமாகும். இந்த மனிதர்கள் இறந்த தமது உறவினர்களை புதைத்திருந்தமையே இதற்குக் காரணம்.

நீண்டர்தால் மனிதன் எப்படித் தோற்றமளித்தான்? பாரமுள்ளவனாகவும் தேகக் கட்டோடும் காணப்பட்டுள்ளான். தலை தட்டையாகவும் நீண்ட முகத்தோடும் கனமான தாடையுடனும் இருந்துள்ளான். பெரிய நெற்றியோ முகவாயோ இருக்கவில்லை.

மிக முந்திய - ஆரம்பகால நீண்டர்தால் மக்கள் பனிப்படிவு காலத்தின் இடைப்பட்ட காலங்களில் பூமி வெப்பமாய் இருந்தபோது வாழ்ந்துள்ளார்கள். பின்னர் மேலும் ஒரு பனிப்படலக் காலம் தோன்றியபோது குகைகளில் வாழத்தொடங்கிய அவர்கள் குளிரை எதிர்த்து வாழவும் கற்றுக் கொண்டார்கள். இவர்கள் வாழ்ந்துள்ள குகைகளில் ஏராளமான அடுப்புகள் காணப்பட்டுள்ளன. வெப்பமூட்டிக் கொள்ளவும் தற்காத்துக் கொள்ளவும் இந்த அடுப்புகளை அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். அத்துடன் இறைச்சி உணவைச் சமைத்துக் கொள்ளவும் நெருப்பை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம்.

அவர்கள் கோடரிகளை மட்டுமன்றி மிகக் கூர்மையான சிக்கி[illegible] ஆயுதங்களையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இவைகளை மிருகங்களை வெட்டவும் தோல் உரிக்கவும்கூடப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் மரத்தின[illegible]யிருக்கிறார்கள். இவர்களுக்குத் தற்கால மனிதர்களைப் போல் அல்லாமல் மூளை பெரிதாக இருந்துள்ளது.

-ராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 29 ★ 05 ★ 1928



விண்ணில் 21 ★ 05 ★ 2004

### அமரர் இராசையா குமாரசாமி

(முன்னாள் உரிமையாளர், இராசையா அன் சன்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்)


பாசமழை பொழிந்து ஒரு கூட்டுக்கிளிகள்போல்
எமைவளர்த்து மேதினியில் - நாம்
நல்வாழ்வுவாழ வழிகாட்டிய அன்புருவான ஐயா!
ஆண்டுகள் நான்காகிலும்உம் நினைவுகள்
எம் உள்ளங்களில் பசுமரத்தாணி போல் நிலைத்திருக்கும்

17/1, புகையிரத வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (74329)

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 05 * 02 * 1940



மறைவு 21 * 04 * 2008

### அமரர் சின்னப்பொடி சின்னத்தம்பி (ஐயா)

[உரிமையாளர்: சிமாசு குஷன் தொழிலகம்]

இல்லத்தின் விடிவிளக்காய் இன்பமாய் வாழ்ந்தீரே!
மாலையிட்டவளை கண்போல பார்த்தீரே!
நீர் பெற்றெடுத்த செல்வங்களை சிறப்புடன் வாழவைத்தீரே!
சுற்றில் நோயும்மைக் கவ்வியதோ? இறைவனுடன் கலந்தீரோ!
எங்கள் ஈரவிழிகள் காய்ந்திடமுன் - மீண்டும்
வந்து பிறந்திட மாட்டீரோ!

கடந்த 21.04.2008இல் இறைவனடி சேர்ந்த அமரர் சின்னப் பொடி சின்னத்தம்பி அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் செலுத்தியும் தொலை பேசி, தந்தி மூலமாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் பல வழிகளிலும் எமக்கு உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த அன்பான நண்பர்கள், உறவினர்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளை தெரிவிப்பதுடன், இன்று (21.05.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மாவடி வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி. - குடும்பத்தினர். (74246)

## வெள்ளை அட்டைக்கு நிவாரணம்

நவஜூலி, மே 21

உலக உணவுத் திட்டத்தின்கீழ்வெள்ளை அட்டைக்கான நிவாரணப் பொருள்கள் தற்போது சகல ப.நோ.கூ.சங்க கிளைகளிலும் வழங்கப்பட்டு வருகின்றன.

முன்னர் ஒரே தடவைகளில் வழங்கப்பட்டு வந்த இந்த நிவாரணத்தை மூடைக்கணக்கில், மக்கள்பெற்றுச்சென்று அவற்றை விற்று வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து இந்தப் பொருள்களை அங்கத்தவர்களுக்கேற்ற முறையில் 4 கட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு வாரமும் தற்போது வழங்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (203-100)

## சுழிபுரம் பகுதியில் கீரைச் செய்கை

சுழிபுரம், மே 21

சுழிபுரம் பறாளை பகுதியிலுள்ள மேட்டு நிலக் காணிகளில்கீரைச்செய்கை நடைபெறுவதால் சுழிபுரம் சத்தியக் காட்டுச் சந்தையில் விற்பனைக்காக தினமும் அதிக அளவில் கீரை கொண்டு வரப்படுகின்றது.

ஒரு பிடி கீரை பதினைந்து ரூபாவுக்கு விற்கப்படுகிறது.

இம்முறை கீரை உற்பத்தி நல்ல பயனைக் கொடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (203-28)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நன்றி நவிலலும்



திருமதி

### ஸ்ரீநதுலமீரா சிதம்பரநாதன்

மண்ணுலகில் 16★05★1947
விண்ணுலகில் 21★04★2008

திதி: பிரதமை

கண்களுக்கு இமைபோலும்
கரிசனையோடெம் முறவாய்
எண்ணிலிடர் துயரேற்றும்
ஏற்றமிகு வாழ்வளித்தெம்
எண்ணம் செயலிலின்றும்
இணைபிரியா அன்பு செய்யும்
மண்ணிலுயர் தெய்வமம்மா
வணங்குகின்றோம்

கொழும்பு, தெஹிவளையில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் மலர் வளையம், துண்டுப் பிரசுரம் விநியோகித்தோருக்கும் வெளிநாடு, உள்நாட்டிலிருந்து தொலைபேசி, தந்தி மூலம் இரங்கல் தெரிவித்தோருக்கும் நன்றி தெரிவிப்பதுடன், இன்று (21.05.2008) புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின் றோம்.

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய். (சி-552898)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 08★05★1948

ஆண்டவன் திருவடியில் 22★05★2007



### அமரர் குணரத்தினம் சிவசுப்பிரமணியம்

[முத்துலிங்கம் - டிங்கர்]

திதி: பிரதமை (21.05.2008)

அன்பின் திருவுருவே! அருமை அப்பாவே!
எம்மைப் பிரிந்து நீங்கள் சென்று
ஓராண்டு காற்றாகிக் கழிந்து விட்டது!
ஆனாலும் உங்கள் நினைவுகள் எம் இதயக் கோயிலில்
அன்பெனும் உருவமாய் அகலாது இருக்கிறது.

மடத்தடி, சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (சி-552912) - குடும்பத்தினர்.


யாழ்நகரில் முதன் முறையாக

Microsoft MCSE
Certified System Engineers
MCP MCTS MCSE MCSA

மைக்ரோசொப்ற் பரீட்சை நிலையம்

- MCS நிறுவனம், உலகப்பிரசித்தி பெற்ற MICROSOFT நிறுவனத்தின் கணனி வலையமைப்பிற்கான (Computer Networking) Microsoft Certified System Engineer [MCSE] கற்கை நெறியை கடந்த 3 ஆண்டுகளாக வெற்றிகரமாக நடாத்திவருகின்றது.
- பரீட்சைகள் MICROSOFT நிறுவனத்தினால் MCS நிறுவனத்தில் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும், உறுதிப்படுத்தப்பட்ட அடையாள அட்டையும் MICROSOFT நிறுவன அதிபர் Bill Gates இனால் வழங்கப்படுகின்றது.
- பல்வேறு கட்டங்களாக தொடரக்கூடிய இக்கற்கை நெறியில் முதலாவது Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified Professional [MCP] சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மேலும் 6 Module பூர்த்தி செய்ததும் Microsoft Certified System Engineer [MC SE]சான்றிதழும் வழங்கப்படுகிறது
- வெளிநாடுகளில் அதிக ஊதியத்துடன் வேலைவாய்ப்புக்களைக் கொண்டுள்ள Network Manager, System Administrator ஆகிய் துறைகளுக்கு MCSE, MCSA தகுதி பெற்றோரே தெரிவு செய்யப்படுகின்றனர். மேலும் MCSE தகுதி பெற்றோருக்கு விசா நடைமுறைகளின் போது மேலதிக புள்ளிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது
- வெளிநாடுகளில் 7 x (225+400))$US செலவாகும் மைக்ரோசொப்ற் பொறியியலாளர் கற்கை நெறியை இலங்கையில் மிகக்குறைந்த செலவில் கற்கும் சந்தர்ப்பம்.

மேலதிக விபரங்களிற்கு, நேரில்



Mobile@net Computer Services (MCS),
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணத்தில் கற்கை நெறிகளையும், பரீட்சைகளையும் நடாத்தும் தனித்துவமான நிறுவனம்

Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் சுற்றுப்போட்டி


கொடியேற்றத்தின் போது


வீரர்களின் அறிமுகத்தின்போது

## மானிப்பாயை வென்றது யூனியன்ஸ்

வலி.வடக்கு,மே21

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஈ.எஸ். பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தி வரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றில் தெல்லிப்பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகமும் தெல்லிப்பழை விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் விளையாட்டுக் கழகம் ஆட்ட நிறைவில் 04 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

டக்சாயன் ஆட்டமிழக்காது 61 ஓட்டங்களையும், ஜான்சன் 67, சாந்தசீலன் 56 மற்றும் இராகுலன் ஆட்டமிழக்காது 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

ஜெயரூபன் தலா 06 ஓவர்கள் பந்து வீசி முறையே 25, 44 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் மற்றும் மயூரன், பாஸ்கரன் முறையே 35, 38 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

239 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடகள மிறங்கிய மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஒட்ட எண்ணிக்கையை விரைவாக அதிகரித்துக் கொண்டு இருந்த வேளையில் முதலாவது விக்கெட்டை இழந்ததைத் தொடர்ந்து ஓட்டத்தின் திசை மாறியது. மானிப்பாய் பரிஸ் விளையாட்டுக் கழகம் 23.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டது.

பாஸ்கரன் 54, வினோத் 32, ஹரிகரன் 23, ஜனார்த்தனன் ஆட்டமிழக்காது 13 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டார்கள்.

அருண்ராஜ் 06 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டையும் பிரசாந்தன் 04 ஓவர்கள் பந்து வீசி பந்து வீசி 27 ஓட்டங்களுக்கு 02 விக் கெட் டையும் கிருபா 02 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 07 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், தினேஸ்கரன் 02 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் குறிப்பாக சுஜாந்தன் 2 பந்துகளை மட்டும் வீசி ஓட்டம் ஏதும் இன்றி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## சாதனைபடைத்த ஹாட்லி மாணவன் ஹரிகரன்



இலங்கை அமெச்சூர் மெய்வல்லுனர் சங்கத்தின் தேசிய கனிஷ்ட மென்வன்மைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி மாணவன் செல்வன் ஹரிகரன் வடிவேஸ்வரன் 18 வயதின் கீழ்ப் பிரிவு தட் டெறிதல் போட்டியில் முதலாம் இடத் தை தட்டிச் சாதனை நிலைநாட்டித் தங்கப் பதக்கத்தைப் பெற்றுள்ளார்.

இப் போட்டி கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெற்றது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட மெய் வன்மைப் போட்டியில் 17 வயதின் கீழ்ப் பிரிவு தட்டெறிதல் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றவராவார். செல்வன் ஹரிகரன் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக உறுப்பினரென்பதும் குறிப்பிடத்தக்கது.

## இணுவில் இந்துவின் கிரிக்கெட்; எவரெஸ்ட் சம்பியனானது

வலி.வடக்கு,மே 21

இணுவில்இந்து விளையாட்டுக் கழகம் 50 ஆவது அகவை நிறைவையொட்டி 17 வயதுப் பிரிவினருக்கு இடையே நடத்திய 07 பேர் பங்குபற்றும் 06 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் போட்டியில் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கோண்டாவில் நிரூ விளையாட்டுக் கழகமும், இணுவில் எவரெஸ்ட் விளையாட்டுக்கழகமும்மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய நிரூ விளையாட்டுக்கழகம் 06 ஓவர்கள் நிறைவில் 05 விக்கெட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

ஜனார்த்தனன் 18, கீர்த்திகன் 15 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்கள்.

உத்தமகுமான், ரகுவரன், ஞானநந்தசர்மா முறையே 04, 09, 20 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எவரெஸ்ட் விளையாட்டுக்கழகம் 4.3 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை இழந்து 56 ஓட்டங்களை பெற்று வெற்றி இலக்கை அடைந்தார்கள்.

ஞானநந்தசர்மா 27, ரகுவரன் 15 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள்.

ஜனுதாஸ் 10 ஓட்டங்களை கொடுத்து 02 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

ஆட்ட நாயனகானகவும், தொடர் ஆட்ட நாயகனாகவும் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஞானநந்தசர்மா தெரிவு செய்யப்பட்டார். (1-86)

## 'தூய ஒளி' கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம்,மே 21

'தூய ஒளி' கிண்ணத்துக்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

மண்டைதீவில் படுகொலை செய்யப்பட்ட 31 பொது மக்களின் ஞாபகார்த்தமாக 22 ஆவது ஆண்டாக இந்தச் சுற்றுப்போட்டி நடத்தப்படுகின்றது.

யாழ்.,வலிகாமம் உதைபந்தாட்ட லீக்குகளின் இணைந்த விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலேயே இச் சுற்றுப்போட்டி இடம்பெறும்.

குருநகர் புனித சூசையப்பர் கழக ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட லீக், குருநகர் யுத்கார்மல் விளையாட்டுக் கழகம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படவிருக்கும் இச் சுற்றுப்போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் கழகங்களை இன்று விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. போட்டி அட்டவணை தயாரித்தல் நாளை இடம் பெறும். (1)

## நவாலி ம.வி.க்கு உடற்பயிற்சியில் இரண்டாம் இடம்

நவாலி,மே 21

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் நவாலி மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியில் வலய மட்டத்திலான உடற்பயிற்சி போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. (1-100)

## 69 ஓட்டங்களால் வென்றது ஜொலிஸ்ரார்

வலி.வடக்கு,மே 21

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஈ .எஸ்.பேரம்பலம் சக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்திவரும் 30 ஓவர்களுக்கு மட்டுப்படுத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டமொன்றில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் 69 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாணம் காமாட்சி விளையாட்டுக் கழகமும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 29.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 203 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

சிவராசா 65, ஜனார்த்தனன் 43, கோசிகன் 28 ஓட்டங்களை பெற்றனர்.

சிவசேகர் 06 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும், சாம்சன் 06 ஓவர்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டையும் தீபன் 3.4 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

204 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய காமாட்சி விளையாட்டுக் கழகம் 26 ஓவர்களில் 134 ஓட்டங்களைப் பெற்று அனைத்த விக்கெட்டுகளையும் இழந்தது.

சிவசேகர் 30, சாருஜன் 20, தீபன் 18 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர்.

சுதாகரன் 03 ஓவர்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும், ஜனார்த்தனன் 05 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும், நிரூஜன் 06 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டையும் கைப்பற்றியதுடன் சிந்துஜன், செந்தூரன் முறையே 10, 17 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

## மாவட்டமட்ட பூப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் உடுவில் மான்ஸ் வென்று கேடயம் பெற்றது

வலி.வடக்கு,மே 21

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான பூப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் உடுவில் மான்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப் பழை யூனியன்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுவில் மான்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்டத்தின் தொடக்கம் முதல் இரண்டு சுற்றுக்களிலும்இருஅணிகளும்மிகவும்வேகமாகவும் திறமையாகவும் விளையாடினர்.

முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் தொடர்ந்து உடுவில் மான்ஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து 2:0 என்ற கோல் கணக்கில் உடுவில் மான்ஸ் விளையாட்டுக் கழகம் யூனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்று மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (86)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்



நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. வீரர்கள், வீராங்கனைகளின் ஓட்டப் போட்டிகளை முதல் [illegible] நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன் உரையாற்றுவதை மூன்றாவது படத்திலும் போட்டிகளில் - வெற்றிபெற்ற வீராங்கனை ஒருவருக்கு அரச [illegible] நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யே.ம.சூ.துணை

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான 22.05.2008 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் *நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில* நடைபெறும் திருப்பலி வேளையில்



எமது புத்திரன்
திருநிறை செல்வன்
***அன்ரன்ராஜ (அன்ரன்)***
அவர்களுக்கும்

எமது ஏக புத்திரி
திருநிறைசெல்வி
***சந்திரிக்கா***
அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தும் அதன்பின் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: வரவேற்பு உபசாரம் 25.05.2008 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3மணியளவில் மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

*தங்கள் நல்வரவை நாடும்:*

**திருமதி அ.சூசையம்மா**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

(இருவீட்டார் அழைப்பு)

**திரு.அ.சூசைதாசன்**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

(74336)


## அலங்காரத் திருவிழா

குருநகர், மே 21

ஊர்காவற்றுறை கிழக்கு முதலாம் வட்டாரம் ஆதி வைரவர் ஆலய வருடாந்த அலங் காரத் திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வியாழக் கிழமை நண்பகல் 12 மணிக்கு சாந்தி யுடன் ஆரம்பமாகி அடுத்தமாதம் 7 ஆம் திகதி சனிக் கிழமை 108 சங்கா பிசேகத்துடன் நிறைவடைய வுள் ளது.


## சேவை நலன் பாராட்டு



எமது அரசினர் ஆயுர் வேத வைத்தியசாலையில் பரிசாரகராக 31 வருடம் சேவையாற்றி 21.05.2008 இல் தனது 55 ஆவது வயதில் ஓய்வுபெறும்

**திருமதி மங்களேஸ்வரி பொன்னம்பலம்**

அவர்கள் தனது ஓய்வு காலத்தில் சகல செல்வங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்துகின்றோம்.

**வைத்தியசாலை சமூகத்தினர்**

அரசினர் ஆயுர்வேத வைத்தியசாலை,
கைதடி.

(74314)



## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

*நல்லூர் பாம் சென்ரர்*
19, முருகேசர் லேன், நல்லூர்.



## DLF IPL CRICKET OFFER

ஜூன் 4 வரை மட்டும்

**DISH TV package** ரூபா 9000/= இருந்து (6 மாத இலவச சந்தாவுடன்)

★ DISH TV இற்குரிய கட்டணங்கள் செலுத்தி ஒரு மணி நேரத்தில் Activate செய்து கொள்ளலாம்.

★ DISH TV ரிசீவருக்குரிய அனைத்துSoftware களும் மாற்றிக் கொள்ளலாம்

★ மற்றும் கேபிள் TV க்குரிய அனைத்து உதிரிப்பாகங்களும் மலிவான விலையில் கிடைக்கும்.

★ உங்கள் கேபிள் நெட் வேர்க் சம்பந்தமான அனைத்து தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும்.



மேலதிக விவரங்களுக்கு:

**SATS-TECH ENGINEERS**

இல.182,கே.கே.எஸ்.வீதி, குளப்பிட்டி சேர் அருகில், கோக்குவில்.

(74309) Phone :- 222 5908 / 0777 710785



## உயர்ச்சிப் பாதையில் இணைவதற்கு ஓர் அரிய வாய்ப்பு



தரம் 04 தொடக்கம் O/L வரை

இவ்வருடத்திற்கான அனுமதி வழங்கும் இறுதிச் சந்தர்ப்பம்

இன்று முதல் மே 31 வரை மட்டுமே

*The Express Institute*
Irupalai, Kopay



### மணமக்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 34 வயது, ல/செவ் P.R., 31 வயது, அனுசம், 7ல் செவ்வாய், 34 வயது சித்திரை, லண்டன் P.R உள்ள, கனடா P.R. உள்ள 27 வயது, திருவாதிரை, 30 வயது பூராடம், 27 வயது பூசம், பிரான்ஸ் P.R. உள்ள, 30 வயது 8 செவ பூராடம், 31 வயது பூராடம் சுவிஸ் P.R. மணமகள் கள் தேவை. 30 வயது மகம், 37 வயது அவிட்டம், B.A. பட்டதாரி, 28 வயது பூராடம், 22 வயது சித் திரை மணமகன்கள் தேவை. தொடர்பு:
0776317173 103,சட்டநாதர் வீதி, நல்லூர்.



### மணமகள் தேவை

1971 ஆம் ஆண்டு, ரேவதி நட்சத்திரம், லண்டனில் தொழில்புரியும் மணமகனுக்கு இந்து/ கிறிஸ்தவ மணமகள் தேவை. (திருமணம் முடிந்து லண்டன் அழைத்துச்செல்வார்)

*துர்க்கா திருமண சேவை*
09,சங்கிலியன் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
T.P: 021 4591417



***விற்பனைக்கு:*** ரெலிபோன்வூத் கூடிய கேள்வி விலைக்கு உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: க.சிவபாதசுந்தரமூர்த்தி,
55, சீனியர் லேன், யாழ்ப்பாணம்.
T.P: 2223772



### விற்பனைக்கு உண்டு

வீடியோ, CDகள், கொப்பிகள், தளபாடங்கள் விற்பனைக்குண்டு
T.P: 0602217919, 0779450955.
*தொடர்பு: ம.பரமேஸ்வரி*
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.



## மக்கள் வங்கி

*வாடிக்கையாளர்களுக்கொரு மகிழ்ச்சியான அறிவித்தல்*

**இன்று (21.05.2008) புதன்கிழமை எமது கிளையின் கணனி மயப்படுத்தப்பட்ட சேவையானது எமது உதவிப் பொது முகாமையாளர் திரு. T.K.ஆனந்தராஜா அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.**

**மக்கள் வங்கி,** *சங்கானை.*



## யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்புக் கடன் நிவிர்த்திச் சங்கம் (வ-து)

1. பதவியின் பெயர், குறியீட்டு இல: எழுதுநர் 302/11 (கூ.வே.ஆ.சுற்றுநிருபம் 31/99 அமைய)
2. சம்பள அளவுத்திட்டம்: 10450-12500 / 100 10-110 10 (கூ.வே.ஆ.சுற்று நிருபம் 66/2006 இன்படி)
3. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:

1. கூட்டுறவுப் பணியாளர் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது அதே ஒத்த பதவியில் 11 ஆவது சம்பள திட்டத்தில்4 வருடத்திற்கு குறையாத அனுபவம்

*அல்லது*

2. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்

*அல்லது*

3. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர்தர சித்தி சான்றிதழ் அல்லது க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடசித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் கடமைகளில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம்

4. வயது: 18 தொடக்கம் 45 வரை
(கூட்டுறவு சங்கப் பணியாளர் கடமையாற்றும் கூ.சங்கத் தலைவர் ஊடாக விண்ணப்பிக்கவும். இவர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
5. விண்ணப்ப முடிவு திகதி: 31.05.2008,
6. பிணை: தெரிவு செய்யப்படும் பட்சத்தில் காசுப் பிணையினைச் செலுத்துவதற்கு தயாராக இருத்தல்வேண்டும்.
7. 1.சங்க எல்லைப் பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2.சங்கத்தில் ரூபா 25/= செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்கவேண்டும்.
3.விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்களின் பிரதி என்பன இணைக்கப்படல் வேண்டும்.
8. விண்ணப்பப் படிவங்கள் யாவும் *செயலாளர், யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கம், அரசினர் வைத்திய சாலை, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு எழுதுநர் 302/11 பதவிக்கான விண்ணப்பம் எனக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படவேண்டும்.

*-செயலாளர்*

**யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை
கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன்நிவிர்த்தி சங்கம்,
அரசினர் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
20.05.2008**

(74345)



## ஆறாத்துயரில் ஈராண்டு நினைவஞ்சலி!

### செல்வி கந்தசாமி பரமேஸ்வரி (தேவி)

எங்கள் குடும்பத்தில் பூத்த செல்வமே!
வாழ்க்கை முழுவதும் சோகத்தை
தந்துவிட்டு ஏனம்மா சென்றாய்?
உன்னை செல்லமாக தேவி
என்றழைக்கும் பாவி அம்மாவை
அன்பான தந்தையை ஏனம்மா
மறந்தாய்? ஏனம்மா மறந்தாய்??
பாசத்துடனும் பரிவுடனும்
தேவி என்று அழைக்கும்
அண்ணா, அக்காவை ஏனம்மா மறந்தாய்?
சின்னக்கா என்று செல்லமாக அழைக்கும்
உன்தம்பியை ஏனம்மா மறந்தாய்?
பாவி அவன் உனக்கு தினமும் பூவைத்து
விளக்கேற்றி வழிபடுகின்றானம்மா
இதுதான் அவன் உனக்குச்
செய்யவேண்டிய கடமையா?
இந்தப் பாவிகள் ஐவரும் படும் வேதனையை
ஒரு கணம் கண் திறந்து பாரம்மா!
விதியை வெல்லாது மௌனமாகியது ஏனம்மா
அறியோம் அறியோம் ஊழியின் கொடுமைதனை
யாம் அறியோமம்மா காலமது எத்தனை
கடந்திடினும் மனது மறக்காது
உன் நினைவுகளை.....



***தினமும் கண்ணீருடன் உனை நினைந்து துடிக்கும்***
**குடும்பத்தினர்.**

*4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.* (74310)



## YOGI'S BEAUTY

**(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science)**

### கேக், மாச்சினிமலர் அலங்கார வகுப்புகள்

அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க நீண்ட இடைவெளிக்குப் பின் புதிய கேக் அலங்கார **பயிற்சி வகுப்புகள் 24.05.2008** அன்று ஆரம்பமாக உள்ளன. குறுகிய கால 15 பயிற்சி வகுப்புகள் மட்டும். அழகுக்கலை வகுப்புக்களும் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

ஆர்வம் உள்ளோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

**T.P: 0212 222796 / 060 2210077**
**Mob: 0777164923**
**75,அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு இன்றைய தினம் ஒரு சோதனை நாள்

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்கு உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பில் ஐ.நாவில் அங்கத்துவம் பெற்றுள்ள சகல நாடுகளும் இன்று பங்குபற்றுகின்றன.

ஜெனிவாவில் நடைபெறும் இத்தேர்வில் ஆசியப் பிராந்தியத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் நான்கு உறுப்பு நாடுகளின் இடத்துக்கு ஆறு நாடுகள் களத்தில் உள்ளன. பஹ்ரைன், ஜப்பான், பாகிஸ்தான், தென்கொரியா, கிழக்கு திமோர் ஆகியவற்றுடன் இலங்கை இப்போட்டியில் களத்தில் உள்ளது.

இலங்கைக்கு இன்றைய தேர்தல் ஒரு முக்கிய சோதனைக் களம் என்று கூறப்பட்டாலும், அதை விடவும் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலுக்குத்தான் இத்தேர்தல் பெரும் சோதனைக் களமாக வந்து அமைந்திருக்கின்றது என்பதே உண்மையாகும்.

இதுவரை காலமும் 'ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக் குழு' என்று இயங்கி வந்த அமைப்பே சில வருடங்களுக்கு முன்னர், சீர்திருத்த மாற்றங்களோடு 'ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில்' ஆகப் பிறப்பெடுத்தது.

உலகில் மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்யும் உயரிய சபையாகவும், மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்படுவோருக்காகக் குரல் எழுப்பும் உச்ச மன்றமாகவும் இந்தக் கவுன்ஸில் விளங்கவேண்டும் - விளங்கும் - என்பதே இது நிறுவப்பட்டதற்கான பிரதான நோக்கம்.

இந்த நோக்கத்தில் வழுவாது அந்த அமைப்பு செயற்படுகின்றதா, செயற்படுமா என்பதைப் பரிசோதிப்பதற்கான ஓர் 'அமிலச் சோதனையாக' (Acid Test) இந்தத் தேர்தல் - இன்றைய வாக்களிப்பு - வந்து அமைந்திருக்கின்றது.

இந்தச் சோதனையை - சவாலை - இந்தக் கவுன்ஸில் எப்படி எதிர்கொண்டு தாண்டப் போகின்றது என்ற கேள்வியை மனித உரிமை அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும், இவ்விடயத்தில் ஈடுபாடு கொண்ட சர்வதேசப் பிரமுகர்களும் பகிரங்கமாகவே எழுப்பியிருக்கின்றார்கள்.

மோசமான மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச ரீதியில் குற்றச்சாட்டுக்கு இலக்காகியிருக்கும் இலங்கை இன்றைய தேர்தலில் போட்டியிடுகின்றது. இலங்கை அரசுப் பிரதிநிதிகள் உலகம் முழுவதும் விஜயம் செய்து தமது நாட்டையும் இந்தக் கவுன்ஸிலின் முடிவுகளைத் தீர்மானிக்கும் ஓர் அங்கத்துவ நாடாக மீண்டும் தெரிவு செய்யும்படி பல்வேறு தேசங்களையும் வலியுறுத்தி - பிரசாரம் மேற்கொண்டு - கோரியிருக்கின்றார்கள்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தக் கவுன்ஸிலில் அங்கத்துவம் வகித்த இலங்கை, அந்தக் கவுன்ஸிலில் இடம்பெற்றுக்கொண்டே கவுன்ஸிலின் தீர்மானத்துக்கு மசிய மறுத்து, எகிறிக் குதித்து வந்தது என்பது வெளிப்படை.

பலவந்தமாகக் கடத்திக் காணாமற்போவோரின் எண்ணிக்கை வீதம் உலகிலேயே உச்சமாக இருக்கும் நாடு இலங்கை. இந்தக் கொடூரத்துக்கு பொறுப்புக் கூற இலங்கை அரசு தவறிவிட்டது. இப்போக்குக் குறித்து நேரில் பிரசன்னமாகி, விசாரித்து அறிவதற்காக ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் ஒன்றை இலங்கையில் அமைத்து செயற்படுத்துவதற்கு அனுமதி தருமாறு இந்தக் கவுன்ஸிலும், ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆபர் அம்மையாரும், ஏனைய - சர்வதேச - மனித உரிமை அமைப்புகளும் பகிரங்கமாக விடுத்த கோரிக்கையை இலங்கை அரசு வெளிப்படையாகவே நிராகரித்து ஒதுக்கி வருகிறது.

ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலில் ஒரு நாடு அங்கத்துவம் பெறுவதானால், அந்தக் கவுன்ஸிலின் கௌரவத்தையும், சிறப்பையும், மகத்துவத்தையும் பேணும் வகையில் மனித உரிமைகள் தொடர்பான உயர் தராதரத்தைப் பேணவேண்டும். மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பாகக் கவுன்ஸில் எதிர்பார்க்கும் கருமங்களை உயர்ந்த மட்டத்தில் அது முன்னெடுக்கவும் வேண்டும்.

இவற்றையெல்லாம் செய்யத் தவறியுள்ள - செய்ய மறுத்துள்ள - மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மிக மோசமான பதிவுகளைக் கொண்ட - இலங்கை தேசத்தை இக்கவுன்ஸிலுக்கு மீண்டும் தெரிவு செய்வதன்மூலம் கவுன்ஸிலின் மரியாதையையும், தரத்தையும், கௌரவத்தையும், மதிப்பையும் உலக நாடுகள் சீர்குலைக்கப்போகின்றனவா? அல்லது ஆசியப் பிராந்தியத்துக்கான தேர்வில் போட்டியிடும் ஆறு நாடுகளில் மிக மோசமான மனித உரிமை மீறல் பதிவுகளைக் கொண்ட இலங்கையை நிராகரித்து, ஒதுக்குவதன் மூலம், கவுன்ஸிலின் தராதரம் பேணப்பட்டு அதன் கௌரவம் உறுதி செய்யப்படுமா?

- இத்தகைய கேள்விக்குத்தான் பதிலளிக்க வேண்டிய நிலைக்கு உலக தேசங்களின் கூட்டமைப்பான ஐ.நாவின் அங்கத்துவ தேசங்கள் இன்று தள்ளப்பட்டிருக்கின்றன.

எனவே, இன்றைய வாக்கெடுப்பு இலங்கைக்குரிய சோதனைக் களம் என்பதிலும் பார்க்க ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தராதரத்துக்கான சோதனைக்களம் என்பதே பொருத்தம்.

இன்றைய தேர்வில் தெரிவுசெய்யப்படுவதற்கான அடிப்படைத் தகுதி கூட இலங்கைக்கு இல்லை என்பதைக் கவனத்தில் கொண்டு சரியான தீர்மானத்தை எடுங்கள் என சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற மூன்று தலைவர்கள் உலக நாடுகளைப் பகிரங்கமாகவே கோரியிருக்கின்றார்கள்.

நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்கப் பேராயர் வண. டெஸ்மண்ட் டூட்டு, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர், ஆர்ஜென்ரீனாவின் மனித உரிமை ஆர்வலர் அடொல்போ பேரஸ் எஸ்கியூவெல் ஆகியோரும், சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அமைப்புகளும் இன்றைய தேர்தலை ஒட்டி உலக நாடுகளுக்கு அப்பட்டமாக - வெளிப்படையாக - சுட்டிக்காட்டியிருப்பது இதைத்தான்.

இந்தத் தெரிவில் இலங்கைக்கு சரியான பாடம் புகட்டுவதன் மூலம், மனித உரிமைகளை மோசமாக மீறி, மிதிக்கும் இலங்கையின் போக்கை உலக நாடுகள் பொறுத்துக்கொள்ள மாட்டா - சகிக்க மாட்டா - என்பதை உணர்த்தும்படி மனித உரிமை ஆர்வலர்களும், அமைப்புகளும் எழுப்பும் குரல் உலக நாடுகளின் காதுகளில் வீழ்ந்ததா, அச் செய்தியை உலக நாடுகள் உள்வாங்கி, சரியான எதிர்விளைவைக் காட்டினவா என்பது இன்றிரவு ஓரளவு தெரிந்துவிடும்.

## ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகளின் கையளிப்பு வைபவம் நாளை

யாழ்ப்பாணம்,மே21

யாழ்ப்பாணத்துக்கு இன்று புதன் கிழமை விஜயம் செய்யும் ஐ.நா அபிவிருத்தித் திட்ட நிறுவனக் குழுனர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களைக் கையளிக்கும் நிகழ்வுகளில் கலந்துகொள்வார்கள்.

மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் 16 லட்சம் ரூபா செலவில் அமைக் கப்பட்ட மாதிரி விலங்குணவு மற்றும் விற்பனை நிலையம், புனித நகரில் 2 கோடி 41 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 40 வீடுகள், அல்வாயில் 24 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட 1.2 கிலோ மீற்றர் நீளமுடைய வீதி, கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 67 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட85 விவசாயக் கிணறுகள், தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவில் 53 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட 50 விவசாயக் கிணறுகள், சுழிபுரத்தில் 13 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சனசமூகநிலையம், 79 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 25 வீடுகள், 10 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட 1.5 கிலோ மீற்றர் நீளமுடைய வீதி, புங்குடுதீவில் 17 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட விவசாயம் சார் உணவு உற்பத்தி நிலையம், வண்ணார்பண்ணையில் 73 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகள் ஆகியன ஐ.நா அபிவிருத்தித்திட்ட அதிகாரிகளால் உத்தியோக பூர்வமாக வையளிக்கப்படவுள்ளன. ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் டக்ளஸ் கீ தலைமையில் இன்று யாழ். வரும் இக் குழுவினர் யாழ்.அரச அதிபர் கே.கணேஷைச் சந்தித்துக் கலந் துரையாடவுள்ளதுடன் நாளை வியாழக்கிழமை செயற்படுத்தப்பட்டு முடிவடைந்த சில திட்டங்களை உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பார்கள். (ப-50)

## யாழ்.சேவாலங்கா நிறுவனம் ஊடாக தென்னிந்திய பல்கலைக்களுக்கு தெரிவான யாழ்.மாணவர்கள்

யாழ்ப்பாணம்,மே21

யாழ்.சேவாலங்கா நிறுவனத்தின் கல்விப் பிரிவினர் தென்னிந்திய பல்கலைக் கழகங்களில் கல்வி பயில விண்ணப்பித்த மாணவர்களுள் நேர்முகத் தேர்வில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களது விபரத்தை வெளியிட்டுள்ளனர். மாணவர்களது பெயர் விபரமும் கல்வி பெறவுள்ள பல்கலைக்கழகங்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் சிறி பல்கலைக்கழகக் கல்லூரிக்கு பி.சி.ஏ பாடநெறிக்கு தெரிவானவர்கள் விவரம்:

சதானந்தவடிவேல் சோபனராசா (சுதுமலை கிழக்கு), சிவசண்முக மூர்த்தி சிவசங்கரன் (தொல்புரம்), வினுதா யுகபாலசிங்கம் (கொழும்புத் துறை), நிஜின் கொன்சல்விலிஸ் (பாஷையூர்), நிஜகாரி சிவதாசன் (புன்னாலைக்கட்டுவன் வடக்கு சுன்னாகம்), எட்வேட் ரஞ்சநாயகம் சிகான் (சிவப்பிரகாச வீதி, வண்ணார்பண்ணை), அனுசாந்தி மாணிக்க வாசகர் (ஆனைக் கோட்டை), யாக் கோப் அஜித்எட்சன் (கோவில் வீதி, யாழ்ப்பாணம்), குணராசா பிரிந்தன் (துன்னாலை வடக்கு புலோலி), காஜா ஸ்ரீபன் (சிவப்பிரகாச வீதி, வண்ணார் பண்ணை), சிறிராம் குமார் நதிபரன் (புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு), சின்கஜா சிலுவைதாசன் (சிவன் வீதி, திருநெல்வேலி), டிலானி றோசா புஸ்பகுமார் (கொய்யாத்தோட்டம்), சுகன்யா நடராசா (குமர கோட்டம் கோண்டாவில்), கமலாதரன் இராசையா (சுண்டிக் குள வீதி, கரவெட்டி மேற்கு), யசிதரன் நவரெத்தினம் (மயிலியதனை தொண்டமானாறு), பாலசுப்பிரமணியம் கோபி (348 பலாலி வீதி, திருநெல்வேலி தெற்கு.

பெங்களூர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர் விவரம்: சண்முகதாஸ் துஸ்யந்தன் (கண்டி வீதி, யாழ்ப்பாணம்), சிதம்பர நாதன் பாலகுமார் (சங்கரத்தை வீதி, வட்டுக்கோட்டை), நவரத்தினவேல் தவலோஜினி (வேல்பதி, புத்தூர்).

கார்டன் சிற்றி கல்லூரி - பெங்களூர்: பிரகாசினி இராசரெத்தினம் (கலட்டி வீதி, கோண்டாவில்), சிவசுப்பிரமணியம் கம்ஷன் (கரணவாய் தெற்கு, கரவெட்டி), தனபாலசிங்கம் பாலரூபன் (துர்க்காபுரம், தெல்லிப்பளை), சாளினி திருக்கேதீஸ்வரன் (தாவடி கிழக்கு, கொக்குவில்).

பத்மஸ்ரீ குழும கல்வி நிலையங்கள்: கணபதிப்பிள்ளை பிரேமராகவன் (சிறுப்பிட்டி வடக்கு நீர்வேலி), சாரு கேசி கந்த சாமி (மானிப்பாய் வீதி, உரும்பிராய்), .

கோல்பிஞ்ச் குழும கல்வி நிலையங்கள்: பிரசாந்தி பரமேஸவரன (கைதடி வடக்கு), றூபிணி செல்வராசா (மெமோறியல் லேன், மானிப்பாய்), மைதிலி தங்கராசா.

நாமக்கல் பல்கலைக்கழகம்: சிவானந்தமூர்த்தி சிவேசன் அருணகிரிநாதன் தங்கதுரை (வண்ணார் பண்ணை), பாக்கியநாதர் சொன் பொஸ்கோ (வேம்படி வீதி, யாழ்ப்பாணம்), சாளினி மகேந்திரா (பெந்த கோஸ் லேன், கண்டி வீதி, யாழ்ப்பாணம்).

பொறியியல் மற்றும் தொழில் நுட்பம்: பரதன் சிவராசா (சுதுமலை தெற்கு, மானிப்பாய்)

(ப-302)

## மனித உரிமை மீறல்களை விசாரிக்கும் ஆணைக்குழுவுக்கு நிதிப் பற்றாக்குறை

### அதன் தலைவர் தெரிவிக்கிறார்

கொழும்பு, மே 21

இலங்கையில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல் சம்பவங்கள் குறித்து ஆராய்ந்து வரும் விசாரணை ஆணைக்குழு நிதிப்பற்றாக் குறை காரணமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுயாதீன சட்டத்தரணிகளை நியமிக்க முடியாத நிலையில் உள்ளது எனத் தெரிவித்துள் ளது.

போதியளவு நிதிவசதியின்மையால் சுயாதீன சட்டத்தரணிகள் சேவையை பெற்றுக் கொள்ள முடியா மலுள்ளது எனத் தெரிவித்துள்ள ஆணைக்குழுவின் தலைவரும், முன்னாள் உயர் நீதி மன்ற நீதிபதியுமான நிசங்க உடலகம, இதன் காரணமாக அரச சட்டத்தரணி களை மாத்திரம் பயன்படுத்த வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். ஆணைக்குழுவின் தலைவர் தமது பணிகளுக்கு ஜனாதிபதி செயல கமே நிதிகளை வழங்குவதால், சுயா தீன சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு நிதிவசதியில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் பணிகளில் சட்ட மா அதிபர் திணைக்களம் தலையிடுவதாக குற்றச்சாட்டு வெளியான நிலையிலேயே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது. (சி)

## குணபாலன் வித்தியாலயத்தில் அபிவிருத்திச் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம். மே21

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாலய கல்விசார் அபிவிருத்திச் செயற்றிட்டம் நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெறவுள்ளது.

அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.தமிழ் மாறன் கலந்து கொள்வார்.

நிகழ்வில் செயற்றிட்ட பயிற்சி புத்தக வெளியீடு, பாடசாலை மட்ட தமிழ்த் திறன் போட்டி, பரிசளிப்பு, சுவர் படங்கள் அங்குரார்ப்பணமும் ஓவியர் கௌரவிப்பும் மாணவர் நலநோன்புச் செயற்றிட்ட அங்குரார்ப்பணம் என்பன இடம்பெறவுள் ளன. (203)

### நல்லை

| | |
|---|---|
| வைகாசி 09 | 22.05.2008 |
| | வியாழக்கிழமை |
| திதி: | துதியை |
| | மு.ப. 11.48 வரை |
| நட்சத்திரம் : | கேட்டை |
| | மு.ப. 8.46வரை |
| சுபநேரம் : | 07.22 - 08.52 |
| ராகுகாலம் : | 01.22 - 02.52 |

## கிழக்கு மாகாண சபையில் அரசுக்கு ஆதரவு தரமாட்டாதாம் ஜே.வி.பி.

கொழும்பு, மே 21

கிழக்கு மாகாணசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கப் போராடும் ஆளும் தரப்புக்கு ஆதரவு வழங்கப் போவதில்லை என்றும் மாகாணசபையில் தனது ஒரே உறுப்பினர் தனித்து சுயமாகச் செயற்படுவார் என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

தேர்தல் நீதியான முறையில் இடம் பெறாமையும், இந்தியாவின் விருப்பத்திற்கு ஏற்ப அரசு தேர்தலை நடத்தியமையுமே தமது இம்முடிவுக்குக் காரணம் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் எம்.பியும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகரன் இது தொடர்பாக 'உதயனுக்கு' மேலும் கூறியவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் மோசடிகள் மூலம் வெற்றிபெற்ற அரசு இப்போது கிழக்கு மாகாணசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கப் போராடுகிறது

தேர்தலின் பின் அரசு முதலமைச்சர் நியமனம் தொடர்பாக மேற்கொண்ட தீர்மானமே இந்நிலைக்குக் காரணம்.

அரசைக் காப்பாற்றுவதற்காக அதற்கு முட்டுக் கொடுக்கவேண்டிய தேவை எதுவும் ஜே.வி.பிக்கு இல்லை. ஜே.வி.பி. தனித்துச் சுயாதீன மாகவே செயற்படும். இத்தேர்தலில் பாரிய மோசடிகள் மூலம் வெற்றிபெற்ற அரசுக்கு ஆதரவு வழங்க நாம் ஒருபோதும் முன்வரமாட் டோம்.


தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ப கிழக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்தவேண்டாம் என்று நாம் அரசிடம் கேட்டுக்கொண்டதோடு கிழக்கு மக்களின் தற்போதைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிவிட்டு அதன் பிறகு தேர்தல் நடத்துவது நல்லது என்று அரசுக்கு யோசனையும் தெரிவித்தோம்.

ஆனால், அரசு இந்தியாவின் விருப்பத்தை நிறைவேற்றும் நோக் கில் இத் தேர்தலை நடத்தியது. மோசடிகள் மூலம் வெற்றியும் பெற்றது. அப்படியானதொரு அரசுக்கு நாம் ஆதரவு வழங்கமாட்டோம்.- என்றார். (சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்
13 . 03 . 1943



ஆண்டவன் அடியில்
21 . 04 . 2008

# அமரர் கந்தையா மகாதேவன்



அப்பா!
அவனியிலே அவதரித்து எமக்காக வாழ்ந்தீர்கள்
ஆண்டவனின் திருவடி சேர்ந்ததேனோ எமைவிட்டு?
இன்பமுடன் நாம் வாழ இனிது பல செய்தீர்கள்
ஈசனடி சேர்ந்தின்று முப்பத்தொரு நாளாகிற்று;
உங்கள் அன்பினையும் பண்பினையும் எம்மிடம் வளர்த்து,
ஊர் போற்றும் உத்தமனாய் வாழ்ந்தீர்கள் என்றும்
எண்ணிய கருமத்தை திண்ணமாய் முடித்திடுவீர்கள்
ஏணியாய் இருந்தெம்மை ஏற்றம் பெற வைத்தீர்கள்
ஐயமின்றி நாம் வாழ அறிவுரைகள் செய்தீர்கள்
ஒன்றாக நாமிருந்தோம் குடும்பத்தில் எந்நாளும்
ஓர் உறவு நீங்கள் அப்பா அருகிலில்லை இன்று;
ஔடதமாய் எமை காத்து வளர்த்தீர்கள் என்றும்.



உங்கள் பிரிவுத் துயருடன் எம் கண்ணீர்ப் பூக்களை சமர்ப்பிப்பதுடன் உங்கள் ஆத்மா சாந்தி யடைய சிவன்பாதம் தொழுகின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

84/6, தபாற்கந்தோர் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

*என்றும் உங்கள் நினைவுகளுடன்: மனைவி* - ம. கலாநிதி
*பிள்ளைகள்* - ம.இரதீபன், ம.றஜீவன், ம. யசோநிதி, ம. மதுரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லோட்ஸ் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவு

லண்டன், மே 21

இங்கிலாந்து, நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவந்த முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி நிறைவுபெற்றிருக்கின்றது. நியூஸிலாந்து வீரரான ஜேக்கப் ஓரம் சதம் அடித்து தனது அணியைக் காப்பாற்றினார்.




இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள நியூஸிலாந்து அணி, அங்கு மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. தொடரின் முதல் போட்டி கடந்த வியாழக்கிழமைமுதல் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவந்தது.

இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்து அணி 277 ஓட்டங்களையும், இங்கிலாந்து 319 ஓட்டங்களையும் பெற்றன. 42 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணி, 4ஆம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 40 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. ஜிம்மி கௌவ், றெட்மொண்ட் ஆகியோர் ஆட்டத்தைத் தொடர்ந்தனர். மேலதிகமாக 7 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் நியூஸிலாந்து அணி தனது முதல் விக்கெட்டைப் பறிகொடுத்தது. 17 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் றெட்மொண்ட், அன்டர்ஸனின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களம்புகுந்த மார்ஷல் ஓட்ட மெதுவும் பெறாமல் சைட்பொற்றமின் வேகத்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். றோஸ் ரெய்லர் 20 ஓட்டங்களுடனும், பிரண்டன் மக்கியூலம் 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த ஆரம்ப வீரரான ஜிம்மி கௌவ் 68 ஓட்டங்களுடன் ஸ்ருவேட் பிராட்டின் பந்துவீச்சில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். இங்கிலாந்து அணி 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 115 ஓட்டங்களைப் பெற்றுத் தத்தளித்துக்கொண்டிருந்தது.

இந்நிலையில் 5ஆவது விக்கெட்டில் ஜோடி சேர்ந்த பிளைன் - ஜேக்கப் ஓரம் ஆகியோர் சிறப்பாக ஆடி அணியைத் தூக்கி நிறுத்தினர். ஒரு முனையில் பிளைன் மிகவும் பொறுமையாக ஆட, மறுமுனையில் ஜேக்கப் ஓரம் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தார். இந்த ஜோடி 132 ஓட்டங்களைச் சேர்த்தநிலையில் ஜேக்கப் ஓரம் 101 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 121 பந்துகளை எதிர்கொண்ட அவர், தனது ஓட்டஎண்ணிக்கையில் 15 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களையும் தனது ஓட்டஎண்ணிக்கையில் சேர்த்திருந்தார்.

நியூஸிலாந்து அணி தனது இரண்டாம் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 269 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஐந்தாம் மற்றும் கடைசி நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து முதல் டெஸ்ட் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. ஆட்ட நேரம் முடிவடையும் போது பிளைன் 29 ஓட்டங்களுடனும் (118 பந்துகள்), வெட்ரோறி ஓட்டமெதுவும் பெறாமலும் களத்திலிருந்தனர்.

இந்தப் போட்டியின் நாயகனாக முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு, 48 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்த நியூஸிலாந்து அணித்தலைவர் டானியல் வெட்ரோறி தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது டெஸ்ட் எதிர்வரும் 23ஆம் திகதி மான்செஸ்ரரில் ஆரம்பமாகின்றது.

# ஷேவாக் அதிரடி; டில்லி வெற்றி

பெங்களூர், மே 21

ஷேவாக்கின் அதிரடி கைகொடுக்க, பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கு எதிரான ஐ.பி.எல். ருவென்ரி/20 போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. டில்லி அணி சார்பில் துல்லியமாகப் பந்துவீசிய மெக்ராத், மஹ்ரூப் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளை வீழ்த்தினர். பெங்களூர் அணியின் மிஸ்பா, கோஸ்வாமியின் ஆட்டம் வீணானது.

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்.) சார்பில் ருவென்ரி/20 தொடர் நடக்கிறது. நேற்றுமுன்தினம் பெங்களூரில் நடந்த 43ஆவது லீக் போட்டியில் டிராவிட் தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி, ஷேவாக்கை அணித்தலைவராகக் கொண்ட டில்லி டேர்டெவில்ஸ் அணியுடன் மோதியது. நாணயச் சுழற்சியில் வென்ற ஷேவாக் முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

முதல் ஓவரை மெக்ராத் துல்லியமாக வீசினார். இதில் பெங்களூர் வீரர்களால் ஓர் ஓட்டத்தை மட்டுமே எடுக்க முடிந்தது. சங்வான் வீசிய அடுத்த ஓவரில் மந்தமாக விளையாடும் கலிஸ் வழக்கத்துக்கு மாறாக அதிரடி காட்டினார். ஒரு சிக்ஸர், ஒரு பவுண்டரி உட்பட அந்த ஓவரில் மொத்தம் 19 ஓட்டங்களை எடுத்தார். மறுமுனையில் சிப்லி (2) விரைவில் வெளியேறி ஏமாற்றம் அளித்தார். இவரைத் தொடர்ந்து சிறப்பாக விளையாடி கொண்டிருந்த கலிஸும் பவிலியன் திரும்பினார். ஒரு சிக்ஸர், 3 பவுண்டரிகள் விளாசிய இவர் 25 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்து ஸ்ரீவத்ஸ் கோஸ்வாமி வந்தார். சங்வான் வீசிய 8ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர் மற்றும் 'ஹட்ரிக்' பவுண்டரிகள் அடித்து அசத்தினார். பாட்டியா வீசிய பந்தில் அடுத்தடுத்து இரண்டு பவுண்டரிகள் விளாசினார். யோமகேஷ் பந்தில் பவுண்டரி அடித்து அறிமுகப் போட்டியில் அரைச்சதம் பதிவு செய்தார். ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் விளாசிய இவர் 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

டிராவிட் (9) இம்முறை சோபிக்கவில்லை. பாட்டியா வீசிய கடைசி ஓவரை மிஸ்பா வெளுத்து வாங்கினார். வரிசையாக மூன்று சிக்ஸர்கள், ஒரு பவுண்டரி என அந்த ஓவரில் 24 ஓட்டங்களை எடுத்து, அணியின் ஓட்டஎண்ணிக்கையை உயர்த்தினார். இவர் 4 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் உட்பட 25 பந்துகளில் 47 ஓட்டங்களை எடுத்து, இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்தார். பெங்களூர் அணி 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 154 ஓட்டங்களை எடுத்தது.

155 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கைத் துரத்திய டில்லி டேர்டெவில்ஸ் அணிக்கு ஷேவாக், கம்பீர் ஜோடி அசத்தல் தொடக்கத்தைத் தந்தது. கடந்த போட்டிகளில் சிறப்பாகப் பிரகாசித்திருந்த கம்பீர், ஸ்ரைனின் பந்துவீச்சில் வரிசையாக இரண்டு பவுண்டரிகள் அடித்து அதிரடியை ஆரம்பித்து வைத்தார்.

சஹீர்கான் வீசிய அடுத்த ஓவரில் ஷேவாக் மூன்று பவுண்டரிகள் விளாசி, பெங்களூர் அணியை மிரட்டினார். பிரவீண் வீசிய 7ஆவது ஓவரில் 3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடித்து ஷேவக் விளாசலைத் தொடர்ந்தார். அதே ஓவரின் கடைசிப் பந்தை பவுண்டரிக்கு விரட்ட முயன்ற இவர் சிப்லியின் அபார பிடியெடுப்பில் விக்கெட்டை பறிகொடுத்தார். ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகள் விளாசிய இவர் 19 பந்துகளில் 47 ஓட்டங்களை எடுத்து, அரைச்சதம் கடக்கும் வாய்ப்பை 3 ஓட்டங்களால் நழுவவிட்டார்.

இவரைத் தொடர்ந்து நன்றாக விளையாடிக் கொண்டிருந்த கம்பீரும் 'ரன்-அவுட்' ஆனார். இவர் 31 பந்துகளில் 39 ஓட்டங்கள் (6 பவுண்டரிகள்) எடுத்தார். அடுத்து வந்த டில்சான், டீ வில்லியர்ஸுடன் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி நிதானமாக விளையாட ஓட்டவேகம் குறையத் தொடங்கியது. டீ வில்லியர்ஸ் 21 ஓட்டங்களை எடுத்தார். டில்சான் 4 ஓட்டங்களுடனும், தினேஷ் கார்த்திக் 6 ஓட்டங்களுடனும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

அகில் பந்தில் சிக்ஸர் அடித்து தவான் அணிக்கு வெற்றி தேடித் தந்தார். மஹ்ரூப் 13 ஓட்டங்களுடனும், தவான் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். டில்லி டேர்டெவில்ஸ் 18.2ஆவது ஓவரில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 158 ஓட்டங்களை எடுத்து, 5 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றியைப் பதிவுசெய்தது.

# மனித உரிமை மீறல் கண்டனங்களிலிருந்து இலங்கையைக் காப்பாற்றியது இந்தியா!

கொழும்பு, மே 21

தற்சமயம் ஜெனிவாவில் நடைபெற்று முடிந்துள்ள ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் ஆய்வுக் கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் பற்றிய விவகாரம் கடந்த 13ஆம் திகதி ஆராயப்பட்ட போது இலங்கைக்கு இந்தியா - முழு அளவில் உதவி அளித்து - முதுகு கொடுத்து-காப்பாற்றியிருக்கிறது. இலங்கைக்கு இந்தியா முழுமையான ஆதரவு வழங்கியமையாலேயே இலங்கை சர்வதேச சமூகத்தின் கண்டனங்களில் இருந்து தப்பியுள்ளது.

அந்த ஆய்வுக் கூட்டத்தில் கடும் விமர்சனங்களில் சிக்காமல் தப்புவதற்கு வாய்ப்புக் கிடைத்தமையைக் காரணமாகக் கொண்டே, மனித உரிமைக் கவுன்ஸிலில் மீண்டும் உறுப்புரிமை பெறலாம் என்ற நம்பிக்கை இலங்கைக்கு ஏற்பட்டிருக்கின்றது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கூட்டத்தில், இலங்கையில் இடம்பெறும் கண்மூடித்தனமான கைதுகள், ஆள்கடத்தல்கள், பலவந்தமாகக் காணாமற்போகச் செய்தல், பாரியளவில் மக்களைப் பலவந்தமாக இடம்பெயர வைத்தல் மற்றும் அரச துணைப் படைகளால் சிறுவர்கள் படைக்குச் சேர்க்கப்படுதல் போன்ற மோசமான மனித உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டிப் பெரும்பாலான மேற்கு நாடுகள் கண்டனக் கணைகளைத் தொடுத்தபோது, இந்தியா மட்டும் இலங்கைக்குச் சாதகமான அம்சங்களை மட்டுமே அங்கே பிரதிபலித்து, எடுத்துக் காட்டியது.

இந்தியப் பிரதிநிதி ராஜீவ் குமார் சண்டேர் இலங்கையை இந்தியாவின் நெருக்கமான நட்புறவுமிக்க நண்பன் என வர்ணித்தார். அந்த நாடு (இலங்கை) மனித உரிமைகள் கவுன்ஸிலில் ஆர்வமாகச் செயற்படுகின்றது என்றும் புகழாரம் சூட்டினார் அவர்.

ஐக்கிய நாடுகளின் அமைப்புகளுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்படும் மோதல் போக்குக் குறித்து எதனையும் தெரிவிக்காத அவர், இலங்கை ஐக்கிய நாடு சபையுடன் சிறப்பாக ஒத்துழைப்பதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் சட்டங்கள் சர்வதேசச் சட்டங்களுடன் ஒத்துப்போகின்றன என அவர் அங்கு பாராட்டினார்.

அதிகாரப் பரவலாக்கலுக்கான அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தும் திட்டம் குறித்து இந்தியா அங்கு கேள்வி எழுப்பாமல் தவிர்த்துக் கொண்டது.

ஆனால், இலங்கையின் நண்பன் எனத் தன்னை எப்போதும் அடையாளப் படுத் தும் பாகிஸ்தானோ, மேற்படி அரசமைப் பின் 13 ஆவது திருத்தம் குறித்து அங்கு குறிப்பிட்டு அதில் முன்னேற்றம் ஏதும் உண்டா என்று கேள்வியையும் இலங்கை யிடம் எழுப்பியமை குறிப்பிடத்தக்கது. (உ)

## பூகம்பத்தால் உயிரிழந்தோருக்காக சீனா முழுவதும் துக்கம் அனுஷ்டிப்பு

பீஜிங், மே 21

பூகம்பத்தில் உயிரிழந்தோருக்கு சீனா முழுவதும் நேற்றுமுன்தினம்முதல் மூன்று நாள் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றது.

கடந்த வாரம் சீனாவின் சிசுவான் மாகாணத்தில் ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரமாக உயர்ந்து விட்டது. ஆயிரக்கணக்கானோர் இன்னும் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர். அவர்களை மீட்கும் பணி மும்முரமாக நடந்து வருகிறது.

# 17 ஆண்டுகளாகியும் முடிவுறாத ராஜீவ் கொலை விசாரணை

புதுடில்லி, மே.21

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டு இன்றுடன் 17 ஆண்டுகள் பூர்த்தியடைகின்ற போதிலும், இப்படுகொலையின் பின்னணியில் உள்ள சர்வதேசத் தொடர்புகள், சதித்திட்டங்கள் ஆகியன குறித்து விவாதிக்க நியமிக்கப்பட்ட கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் இன்னும் பூர்த்தியடையாமல் தொங்கி நிற்கின்றன என்று கூறப்படுகின்றது.

ராஜீவ்காந்தி படுகொலையை அடுத்து பல்துறை கண்காணிப்பு முகவர் அமைப்பு (எம்.டி.எம்.ஏ.) என்ற இந்தக் கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

ராஜீவ் காந்தியின் படுகொலையுடன் விடுதலைப் புலிகளுக்கும் இந்தியப் பிரமுகர் சந்திரசுவாமிக்கும் உள்ள தொடர்பு குறித்து எம்.டி.எம்.ஏ. விசேடமாக ஆராய்ந்து வருகின்றது.

" பல உலக நாடுகளுக்கு இது குறித்த விசாரணைகளில் உதவுமாறு வேண்டுகோள் விடுத்து கடிதங்களை அனுப்பியுள்ளோம். இவற்றில் சில பதிலளித்துள்ளன." - என மத்திய புலனாய்வுப் பணியகத்தின் பேச்சாளர் ஜி.மொஹந்தி தெரிவித்துள்ளார்.

எம்.டி.எம்.ஏ. 2[illegible] நாடுகளுக்கு இதுவரை[illegible]றான கடிதங்களை அனுப்பியுள்ளது. இதற்கு ஆறு நாடுகளே பதிலளித்துள்ளன என்று மேலும் குறிப்பிட்டுள்ள அவர், போதிய ஒத்துழைப்பு இன்மையால் சதித்திட்டம் குறித்து விசாரணைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்கிறார்.

"நாங்கள் கடிதங்களை அனுப்பியுள்ள நாடுகளே விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றிடமிருந்து பதில் கிடைத்த பின்னரே இந்தியா அடுத்த கட்ட செயற்பாடுகளை மேற்கொள்ளலாம்" - என்கிறார் அவர்.

சந்திரசுவாமிக்கும் தற்போது செயற்படாத வர்த்தக கடன் வங்கிக்கும் இடையிலான தொடர்புகள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறே இந்தியா உலக நாடுகளைக் கேட்டுள்ளது.

### சந்திரசுவாமியும் வங்கிக் கணக்கும்

இந்த வங்கியிலேயே விடுதலைப் புலிகளின் குமரன் பத்மநாதன் கணக்குகளைப் பேணிவந்தார்.

சந்திரசுவாமிக்கும் உலகின் முக்கிய புலனாய்வு அமைப்புகளான சி.ஐ.ஏ.,மொசாட் போன்றவற்றிற்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் குற்றம்சாட்டப்பட்ட 21 சந்தேக நபர்கள் குறித்தும் விசாரணை இடம்பெறுகின்றது.

எனினும், இது குறித்து மேலதிக விவரங்களை வெளியிட முடியாது. விசாரணை இரகசியமானது.- என்கிறார் அந்த அதிகாரி.

ராஜீவ்காந்தி படுகொலை குறித்து சுயாதீன விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட ஜெயின் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரிலேயே எம்.டி.எம்.ஏ. ஏற்படுத்தப்பட்டது.

உலகின் பல்வேறு நாடுகளுக்கும் எம்.டி.எம்.ஏ. தனது விசாரணையாளர்களை அனுப்பி வைத்துள்ள போதிலும் சதித்திட்டம் குறித்த தகவல் எதுவும் இன்னும் கிடைக்கவில்லை.

இலங்கை, மலேசியா, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு எமது விசாரணையாளர்களை அனுப்பியுள்ளோம் என அவர் மேலும் தெரிவிக்கின்றார்.

எனினும், இந்த விசாரணை அமைப்பின் கால எல்லையை மேலும் இரண்டு வருடங்களுக்குநீடித்துள்ளது.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜோன். எவ்.கென்னடி படுகொலை, இளவரசி டயானாவின் படுகொலை போன்றது ராஜீவ்காந்தி படுகொலை. இவற்றின் பின்னணி மிகவும் திறமையாக மூடிமறைக்கப்பட்டுள்ளது. இவற்றின் குழப்ப தன்மை காரணமாக விசாரணைகள் பல வருடங்களுக்கு நீடிக்கின்றன என்கின்றனர் சம்பந்தப்பட்ட அதிகாரிகள். (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண அமைச்சுப் பதவியை ஏற்க அனுமதி ஆதரவாளர்களிடம் கோருகிறார் ஹிஸ்புல்லா

## மட்டக்களப்பு மாவட்டத்தில் கூட்டங்கள், சந்திப்புகள் மும்முரம்

கொழும்பு, மே.21

கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி வழங்கப்படாமல் ஏமாற்றப்பட்ட ஹிஸ்புல்லா, அரசுத்தரப் புடன் இணைந்து மாகாண அமைச்சுப் பதவியையேனும் பெற்றுக் கொள்ளும் நோக்கில், அதற்கான அங்கீகாரத்தை மக்களிடமிருந்து பெறுவதற்கான நடவடிக்கையில் நேற்றுமுன்தினம் முதல் இறங்கியுள்ளார்.

நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணியளவில் காத்தான்குடியில் உள்ள அவரது அலுவலகத்திலும் பள்ளிவாசல் ஒன்றிலும் அவர் மக்களைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

அச்சந்திப்பின்போது முதலமைச்சர் பதவி வழங்கப்படாமை குறித்துப் பெரிதாக அலட்டிக் கொள்ளாது, மாகாண அமைச்சுப் பதவி ஒன்றைப் பெறுவதற்கான நியாயங்களைப் பற்றி அவர் மக்கள் மத்தியில் கருத்துகளை முன்வைத்தார் என்று நம்பகரமான வட்டாரங்கள்தகவல்தெரிவிக்கின்றன.

முதலமைச்சர் பதவி பிள்ளையாக்கே என்றும், அது தமக்கு வழங்கப்படமாட்டாது என்றும் தேர்தல் முடிந்தவுடன் ஜனாதிபதி தம்மிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டார் என்றும் ஹிஸ்புல்லா அச்சந்திப்பில் குறிப்பிட்டிருக்கின்றார்.

முதலமைச்சர் பதவி தமக்கே வேண்டும் என்று தாம் உறுதியாக நின்றதால் தம் மீது ஜனாதிபதி கடுமையாகச் சீறிப் பாய்ந்தார் என்றும் ஹிஸ்புல்லா அங்கு கூறியிருக்கின்றார்.

இச்சந்திப்புகளில் கலந்துகொண்ட மக்கள் அரசுடன் சேர்ந்து பணியாற்றுமாறும், இல்லை சேர்ந்து பணியாற்ற வேண்டாம் எனவும் இரண்டுபட்ட கருத்துகளைத் தெரிவித்திருக்கின்றனர் என்றும் கூறப்பட்டது.

இருப்பினும் அரசுடன் சேர வேண்டாம் என்ற கருத்துக்களே அங்கு அவரிடம் அதிகமாகத் தெரிவிக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக பெரும்பாலான முஸ்லிம் இளைஞர்கள் அரசுடன் சேரவேண்டாம் என்றும், எதிர்த்தரப்பில் அமர்ந்து முஸ்லிம்களின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றும், ஹிஸ்புல்லாவிடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர் எனவும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(சி)

## மட்டக்களப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொலை செய்யப்பட்டவர் இதுவரை அடையாளங் காணப்படாத நிலையில் மட்டக்களப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

UNIT
Jaffna Nelliady

Intel Dual Core 2.0Ghz, Asus P5GC-Mx, 512mb DDR2 Kingston, 80Gb Sata HDD, 17" Samsung / Intex Color CRT, ATX Case with SMPS, DVD-Writter, UPS, Ps2 Keyboard, Mouse & Speaker 53,750/-

| | |
|---|---|
| **Mother Boards** | |
| Asus P5GC-MX1333Mhz | 6950/- |
| Foxconn intel 945 | 6300/- |
| AsRock LGA | 5800/- |
| Ecs Intel 945 1333Mhz | 6300/- |
| **Rams** | |
| Kingston DDR1 256-2500/- 512- | 3750/- |
| Kingston DDR2 1Gb-2750/- 512- | 1550/- |
| **Hard Disks & Optical Drives** | |
| 40Gb IDE | 4800/- |
| 80Gb IDE | 5800/- |
| 250Gb Sata | 8600/- |
| DVD-RW | 4000/- |
| External Enclosure USB | 4750/- |
| Flash 4Gb Kingston | 2400/- |
| **Monitors** | |
| 15" Samsung / Viewsonic CRT | 11900/- |
| 17" Samsung / Intex Flat CRT | 14500/- |
| 17" Samsung LCD Wide | 25500/- |
| 19" Samsung LCD Wide | 31000/- |
| 128Mb AGPVGA | 4750/- |
| 256Mb PCI EXPRESS VGA | 7500/- |
| **Power & Casings** | |
| ATX LGA Casings with SMPS | 4050/- |
| SMPS - ATX LGA 500W | 2500/- |

**Toners:**
HP 12A, 13A, 15A, 35A, 49A, 53A&92A
Canon EP22, 25 & 26, 303, 308

**Others**
Keyboard Normal 500 MultiMedia 900
Mouse Optical 500/-, 600/-, 900/-, 1500/-
Speaker 650/-, 1250/- & 2500/-
**Woofers** Creative / MicroLab 4000/-

**Printer & Scanners**
Hp D1460-6250/-, HP P1005-16900/-
Canon Lide 25 6900/-, HP G2410 - 11900/-

Brand New Laptops From 59000/-
New Intel Pentium From 39000/-
Special Reduction for Dealers, Assemblers, Schools, Go's & NGO's
We Are Not Big But The Best

மனோகரா சந்தி, 347, K.K.S Road, Jaffna, ✆4590720,2228844
MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy

## அதாவுல்லாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என.

கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், மருதமுனை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை உள்ளிட்ட பல முஸ்லிம் ஊர்களில் இந்த சுவரொட்டிகள் காணப்பட்டன.

இந்த ஊர்களில் பிரதான வீதிகள் உட்பட மூலை முடுக்குகளில் எல்லாம் இவை ஒட்டப்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது.

## நீதி அமைச்சு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் விஜயம் செய்வர் என்றும் சரணடைந்தவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குவது தொடர்பாக அங்கு கலந்தாலோசனை நடத்துவார் என்றும் தெழில்நுட்பக்கல்லூரி அதிபர் எஸ்.யோகராஜா தெரிவித்தார்.

## விடுதலைப் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டனைத் தளபதியாக செயற்பட் டார். அந்தப் பொறுப்பை 1993 வரையும் பின்னர் 95 முதல் 97 வரையும் வகித்தார்.

அந்தப்படையணிக்கு தனியான படைத்துறை பயிற்சி மையங்கள், ஆய்வுப்பிரிவுகள், பாதுகாப்புத்துறை கல்லூரிகள் ஆகியவற்றை ஆரம்பித்து செயற்படுத்தியவரும் அவரே.

புரிந்துணர்வு ஒப்பந்த காலத்தில் - 2003 ஆம் ஆண்டில் - சிங்கப்பூர் சென்று இதய அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட இவர், வன்னி திரும்பிய பின்னர் சில கால ஓய்வில் இருந்துவிட்டு, போராளிகளின் சேம நலம் பிரிவுக்குப் பொறுப்பாளராக இருந்தார்.

2000ஆம் ஆண்டில் ஆனையிறவு மீட்புப் போருக்கும் அவர் கட்டளைத் தளபதியாக விளங்கினார். குடாரப்பு - மாமுனை தரையிவுக்கம் மூலம் ஆனை யிரவில் சிக்குண்டிருந்த 1200 இராணுவத் தினரை விரட்டி ஆனையிறவை மீட்டார்.

அண்மைக் காலங்களில் உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் விடுதலைப் புலிகளின் பல அணியினருக்கு போர்த் தந்திரோபாயங்களையும் உத்திகளையும் பயிற்றுவித்ததோடு, மன்னார், மணலாறு களமுனைகளிலும் பங்கேற்றார்.

இந்த ஆண்டில் முதல் மூன்று மாதங்களாக அவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுவந்தார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் மூத்த கள அனுபவம் மிக்க பால்ராஜ் நேற்று பி.ப. 2 மணிக்கு மரணமடைந்தார்.

(அ-1)

தேவை

பிரபல கணனி நிறுவனத்திற்கு Hardware, Graphic Desighing தெரிந்தவர்கள் தேவை 28.05.2008 இற்கு முன் Biodata இணை அனுமதி அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இல: 5097
C/o/பா. உதயன், யாழ்ப்பாணம்.

# கனடா கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர் இலங்கையில்

## கனேடியப் பத்திரிகை தகவல்

கொழும்பு, மே 21

கனடா, பிறம்டன் பகுதியில் இளம் பெண் ஒருவரை துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்த இலங்கைத் தமிழர் ஒருவர் இலங்கையில் தலைமறைவாகி யிருக்கின்றார் என்று கனடாப் பொலிஸாரை மேற்கோள் காட்டி கனடா நாட்டின் 'ஸ்ரார்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கனடா, ரொரன்டோ நகரில் வசித்து வந்த விஜயராஜா மாணிக் கவாசகர் (வயது - 26) என்ற இளைஞனே, பிறம்டன் பகுதியில் வசித்த அம்மிரித்தா (வயது - 20) என்ற யுவதியை கடந்த 2004 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி கொலை செய்து விட்டுத் தலைமறைவாகி இருந்தார் என் றும், அவர் தற்போது தனது சொந்த நாட்டிலேயே தலைமறைவாகி வசித்து வருகிறார் என்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பவை வருமாறு:-

குறித்த இளைஞனது நண்பர்களுக்கும், கொலை செய்யப்பட்ட யுவதியின் சகோதரர்களுக்கும்இடையில் இருந்து வந்த பகையே இந்தக் கொலை இடம் பெறக் காரணமாக அமைந்திருந்தது.

இதற்கிடையில் கொலையுடன் தொடர்புடைய விஜயராஜா மாணிக்க வாசகருக்கு துப்பாக்கி வழங்கியவர் என்று கூறப்படும் ஜெயகணேஷ் சற்குரு (வயது - 30) என்ற தமிழர் கனடாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, கடந்தவெள்ளிக்கிழமை கனடா நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவருக்கு நீதிமன்றம் நான்கு வருடச் சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்தது - என்று 'ஸ்ரார்' பத்திரிகையில்மேலும் கூறப்பட்டுள்ளது. (சி)

## கோப்பாய் கலாசாலையில் கல்விக் கண்காட்சி

கோப்பாய் கலாசாலை நடத்தும் கல்விக் கண்காட்சி நாளையும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் கோப்பாய் கலாசாலையில் தினமும் முற்பகல் 9 மணி முதல் இடம் பெறவுள்ளது.

கண்காட்சிஒழுங்கமைப்புகுழுத்தலைவர் க.ரவீந்திரராசா தலைமையில் நாளை மு.ப. நடைபெறவுள்ள கல்விக் கண்காட்சி ஆரம்ப நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முது நிலை விரிவுரையாளர் கலாநிதி ஜெயலஷ்மி இராஜநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். (அ-2)

## புத்தல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது அங்கு சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மூவர் அடங்கிய ஆயுததாரிகள் குழு ஒன்றே இத்தாக்குதலை நடத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் இணைந்து அப்பகுதியில் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(சி)

## லண்டன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த விஜயம் மூலம் கிழக்குத் தமிழர்களின் தலைவர் இவரே என்று பிள்ளையானை ஜனாதிபதி சர்வதேச சமூகத்திற்கு அறிமுகப்படுத்தவுள்ளார் என்றும் அந்த இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிழக்கின் முதலமைச்சராகப் பதவியேற்ற பிள்ளையான், ஞாயிற்றுக்கிழமை கண்டி தலதா மாளிகைக்குச் சென்று மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளைச் சந்தித்து ஆசிபெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## மன்னார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நளவன்வாடிப்பகுதியில் பெண்கள் உட்பட 600 பேர்வரை இராணுவத்தினரால் அழைத்து வரப்பட்டு அப்பகுதியில் உள்ள மைதானம் ஒன்றில் அதிகாலை 4.00 மணிமுதல் காலை 10 மணிவரை தடுத்துவைக்கப்பட்டனர். அவர்களை இராணுவத்தினர் படம்பிடித்த பின்னர் விடுவித்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சௌத்பார் பகுதியில் சுமார் நூறு பேர் வரை இராணுவத்தினரால் அழைத்து வரப்பட்டு வீதிகளில் அதிகாலை 4.00 மணிமுதல் காலை 9 மணிவரை தடுத்து வைக்கப்பட்டனர் என்றும், அவர்களையும் இராணுவத்தினர் படம் பிடித்த பின்னர் விடுவித்தனர் என்றும் மேலும் கூறப்பட்டது.

இவர்களில் கைது செய்யப்பட்ட 36 பேரை இராணுவத்தினர் மன்னார் பொலிஸாரிடம் கையளித்தனர். அவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், இராணுவக் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் கைக்குண்டு வீச்சில் பெரும் சேதம் ஏதும் ஏற்பட்டதாகத் தகவல் கிடைக்கவில்லை.

(சி)

## மனித....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைக் கவுன்ஸிலில் இடம் பெறுவதற்கு இலங் கைக்கு இடமளிக்க வேண்டாம் எனக் கோரும் பிரசாரத்தை சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச் சபை போன்றவை தீவிரமாக முன்னெடுத்துள்ளன.

இலங்கைக்கு வாக்களிக்க வேண்டாம்

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்ற பிரமுகர்கள் உட்படப் பலர் இலங்கைக்கு இத்தேர்தலில் வாக்க ளிக்க வேண்டாமெனப் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நோபல் பரிசு பெற்றவர்கள் வரிசையில் தென்னாபிரிக்கப் பேராயர் டெஸ்மண்ட் டூட்டு, அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மிகார்ட்டர்ஆகியோரைத்தொடர்ந்து ஆர்ஜென்ரீனாவின் அடொல்போ பேர்ஸ் எஸ்கியூவெலும் இலங்கைக்கு வாக்களிக்க வேண்டாமெனப் பகிரங்கமாகக் கோரியுள்ளார் என்பதை சர்வதேச மனித உரிமைக் கண்காணிப்பகம் உலக நாடுகளுக்குச் சுட்டிக்காட்டியிருக்கின்றது.

ஆர்ஜென்ரீனா செய்தித் தாளொன்றில் தாம் எழுதியுள்ள கட்டுரையில், இலங்கையில் அரச படையினரால் நாளாந்தம் மேற்கொள்ளப்படும் சித்திரவதைகள், சட்டத்திற்கு விரோதமான படுகொலைகள், நூற்றுக்கணக்கானோர் வலுக்கட்டாயமாகக் காணாமற் போகச் செய்யப்படுதல் போன்றவை 1970 - 80 களில் இலத்தீன் அமெரிக்க நாடுகள் பலவும் தமது சொந்தப் பிரஜைகளுக்கு எதிராக மேற்கொண்ட அராஜகங்களை நினைவு படுத்துபவையாக உள்ளன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சொந்த மக்களை அவர்களது வீடுகளிலிருந்து நள்ளிரவில் பலவந்தமாகத் தூக்கிச் செல்வது, அதன் பின்னர் அவர்கள் குறித்த தகவல்கள் எவையும் தெரியாமல் போவது போன்ற வற்றை விட மிக மோசமான கொடூரத்தை அரசு ஒன்று இழைக்க முடியாது என்பது இலத்தீன் அமெரிக்க மக்களுக்கு நன்கு தெரியு மெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

**தோற்கடிக்குமாறு வேண்டுகோள்**

இலங்கை அரசை இத்தேர்தலில் தோற்கடிப்பதன் மூலம் அந்த நாட்டு மக்களுக்கு இலத்தீன் அமெரிக்க மக்கள் பாரிய சேவையாற்ற முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்ரீனாவின் இராணுவ அரசால் மேற்கொள்ளப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் கொடுத்தமைக்காக 1980 இல் எஸ்கியூவெலிற்கு சமாதானத்திற்கான நோபல் பரிசு கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையைச் சேர்ந்த பல அரசசார்பற்ற அமைப்புகளும் சர் வதேச அரசசார்பற்ற அமைப்புகளின் கூட்டமைப்பும் இலங்கைக்கு வாக்களிக்க வேண்டாமெனக் கோரி ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்குப் பகிரங்கக் கடிதங்களை எழுதியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் இலங்கை தெரிவு செய்யப்படுவது, ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலின் தராதரம், மதிப்பு, கௌரவம் ஆகியவற்றைக் கேள்விக்குள்ளாக்கி, கவுன்ஸிலின் மீதான நம்பிக்கையைச் சர்வதேச ரீதியில் சிதறடிக்க வைத்துவிடும் என்ற ரீதியில் மேற் கொள்ளப்பட்டு வரும் பிரசாரம், இலங்கைக்கு எதிரான கருத்து நிலைப்பாட்டை வலிமையாக ஏற்படுத்தியிருப்பதாக அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். (உ)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.05.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org